# அழைப்புப் பணியின் அடிப்படைகள்!!

உரை : அஷ்ஷேக் மின்ஹாஜ் - இலங்கை.

தொகுப்பு : அப்துல் ஹமீது-ரியாத்.

---

இஸ்லாமிய த:வா அழைப்புப் பணி என்பது வெறும் அழைப்பாக இருக்க முடியாது அது ஒரு கொள்கை சார்ந்த அழைப்பாக இருக்க வேண்டும். அதற்குத் தான் த:வா என்று பெயர். இத்தகைய தலைப்பு ஏன் நமக்கு மறுபடியும் முன் வைக்கப்படுகின்றது. த:வாவைப் பற்றி அறிந்திருக்கின்றோம். அது பற்றிப் பேசுகின்றோம். அந்த அழைப்புப் பணியிலும் ஈடுபடுகின்றோம். இத்தகைய நிலையில்,

சகோதரர்களே!

இன்று ஒவ்வொரு அமைப்பும் இந்த அழைப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அந்தந்த அமைப்புக்கள் பின்பற்றும் முறைகளும் வெவ்வேறாக இருக்கக் காண்கின்றோம். இந்த நிலையில், எந்த மாதிரியான அழைப்புப் பணி சிறந்தது என்று சற்று சிந்தனை செய்பவர்களுக்கு ஏற்படக் கூடிய தடுமாற்றமாகும். அந்தத் தடுமாற்றத்தில் தாங்கள் எந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தால், இஸ்லாமிய அழைப்புப் பணியில் முழுமையாக ஈடுபட முடியும் என்றும், அப்படி ஈடுபடுகின்ற அந்தப் பணியின் மூலம் முழுமையான இறைப் பொருத்தத்தை அடைய முடியுமா? என்பது பற்றியும் சிந்திக்க ஆரம்பித்து, தடுமாற்றத்திற்குள்ளாகின்ற நிலையை நாம் காண முடிகின்றது. இதில் சத்தியத்தைத் தேடுகின்ற வேட்கையில் பல்வேறு கொள்கை சார்ந்தவர்களுடன் எழுகின்ற சந்தேகங்களில், ஏற்படுகின்ற வாத பிரதிவாதங்கள், தன் சொந்த சகோதரனையே அந்நியனாகப் பார்க்கவும், அவன் இன்ன இயக்கத்தைச் சார்ந்தவன் என்ற முத்திரை குத்தப்படுவதையும் எம்முடைய அனுபவத்தில் காண முடிந்தது. இதற்கு ஒட்டு மொத்த தீர்வு தான் என்ன என்பதை ஆராய்வது தான் இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடுகின்ற ஒரு அழைப்பாளன் தான் கொண்டிருக்கின்ற கொள்கையில் எந்தத் தடுமாற்றத்தையும் காணக் கூடாது. அத்தகைய தடுமாற்றமானது அவனது அழைப்புப் பணியை பாதிப்படையச் செய்ய வேண்டிய நிலமையை உருவாக்கி விடலாம். எனவே, ஒரு அழைப்பாளன் தான் கொண்டிருக்கக் கூடிய கொள்கையில் உறுதிமிக்கவனாகத் திகழ வேண்டியது அவசியமாகும். இந்த அழைப்புப் பணி என்பது ஒரு சாதாரண செயல் அல்ல. மாற்றமாக அது அல்லாஹ்ஹு த்தஆலா நமக்கு கடமையாக்கி வைத்த பணி. உத்தம நபிமார்கள் ஏற்றுக் கொண்ட பணி. அந்தத் தொடரிலே வந்த எம் பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களால் பூரணப்படுத்தப்பட்ட பணியாகும். எனவே, அந்தப் பணி உண்மையிலேயே புனிதமானதொன்றாகத் தொடரப்பட வேண்டும். அதிலே தனிமனிதர்களின் உணர்வுகள், அபிலாசைகள் கலந்து, இந்த அழைப்புப் பணியைக் கலங்கப்படுத்த அனுமதிக்கக் கூடாது.

சகோதரர்களே! அல்லாஹ்ஹு த்தஆலா நபி (ஸல்) அவர்களைப் பார்த்துக் கூறுகின்றான்.

(நபியே!) நீர் சொல்வீராக! "இதுவே என்னுடைய (நேரிய) வழியாகும் நான் அல்லாஹ்வின் பால் (உங்களை) அழைக்கின்றேன் நானும் என்னைப் பின்பற்றியவர்களும் தெளிவான ஞானத்தின் மீதே இருக்கின்றோம் அல்லாஹ் மிகத் தூய்மையானவன் ஆகவே, அவனுக்கு இணைவைப்போரில் நானும் ஒருவனல்லன்." (12:108)

இஸ்லாமியப் பிரச்சாரப் பாதையில் தடம் பதிக்க விரும்புகின்ற ஒவ்வொரு சகோதரனும் மிகத் தெளிவோடு தான் அதில் காலை வைக்க வேண்டும். ஏன் என்றால், அல்லாஹ்ஹு த்தஆலா தன்னுடைய ரசூல்மார்களுக்கு விதித்த கடமையை நாம் செய்யப் போகின்றோம். வெறும் கொள்கைப்

பரப்புப் பிரச்சாரகன் அல்ல நாம். எனவே அந்தப் பிரச்சாரத்தை என் இஷ்டப்படிச் செய்ய முடியாது. தங்கள் தங்கள் சிந்தனையைக் கொண்டு, தங்களுக்குள் ஒரு முடிவை எடுத்துக் கொண்டு அதற்கென தனிக் கொள்கையை வகுத்துக் கொண்டு இந்த அழைப்புப் பணியில் ஈடுபட முடியாது. அதற்கான தெளிவை நாம் இறை வழிகாட்டுதல்களிலிருந்து மட்டும் தான் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் நாம் வேதங்களை நம்பியவர்கள், அதிலும் இறுதி வேதமான குர்ஆனை நம்பியவர்கள். அந்தக் குர்ஆனைப் பற்றி நம்முடைய கருத்தென்ன?, அதன் மீதுள்ள நம்முடைய பிடிப்பு என்னவென்றால், இறைவன் தன் திருமறையைப் பற்றிக் கூறுவது போல,

على بسيرة எங்களுக்கென ஒரு தெளிவு இருக்க வேண்டும். அந்தத் தெளிவின் அடிப்படையில் நாம் செயல்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் விளக்கமாக இந்தக் குர்ஆனை உங்கள் மீது இறக்கி அருளினோம். இது மு:மின்களுக்கு நேர்வழியாக அருளாக இருக்கின்றது.

இந்தத் திருமறைக் குர்ஆனில் எல்லாவற்றுக்கும் விளக்கங்கள் அமைந்துள்ளது. எனவே, இதில் எவ்வாறு அழைப்புப் பணி செய்வது என்பதற்கும் விளக்கம் அமைந்துள்ளது. தனி மனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு, சமூக அரசியல், ஒழுக்கக் கோட்பாடு, ஆன்மீகம் என்று அது வரையறுத்துச் சொல்லாத நெறிமுறைகளே இல்லை என்னும் அளவுக்கு அதில் மிகச் சரியான வழிகாட்டுதல்கள் அமைந்துள்ளன. இவற்றைப் பற்றி மிகத் தெளிவான நெறிமுறைகளைக் கொண்டிருக்கின்ற இந்தத் திருமறை, தன்னுடைய அந்தத் தெளிவான கொள்கையின் பக்கம் மக்களை எவ்வாறு அழைப்பது என்பது பற்றியும் மிகத் தெளிவான கொள்கையைக் கொண்டிருக்கின்றது. அது கூறுகின்ற இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது நம் மீது கடமையாக இருக்கின்றது. அதன் மீது நமக்கு ஈமானும் இருக்கின்றது. அப்படி என்றால், அந்தக் குர்ஆன் முன் வைக்கின்ற அழைப்புப் பணியின் முறைகளை ஏற்றுப் பின்பற்றுகின்ற அவசியமும் நமக்கு இருக்கின்றது. அது தவிர வேறு ஒரு முறை நமக்கு இருக்க முடியாது. இறைவன் தன்னுடைய திருமறையைப் பற்றிக் கூறும் பொழுது, ما فركنا من شى இந்தக் குர்ஆனில் நாம் எதனையும் விட்டு வைக்கவில்லை. எனவே அந்த அழைப்புப் பணியின் முறையையும் அதில் கூறாமல் அவன் விட்டு விடவில்லை. அத்தகைய நெறிமுறைகளை குர்ஆனில் இருந்தும் சுன்னாவில் இருந்தும் பெற்று விட்ட பின்னால், கால சூழ்நிலைகளினால் பாதிப்படைவது என்பதும், நாம் அந்தக் கொள்கையின் பால் கவனமில்லாமல் தன்னிச்சையாக முடிவெடுத்து அழைப்புப் பணியில் ஈடுபடுவது என்பதும், அந்தக் குர்ஆனின் பாலும், முஹம்மது (ஸல்) அவர்களுடைய கொள்கையின் பாலும் நமக்கு ஒரு தடுமாற்றம் இருக்கின்றது எனபதைத் தான் காட்டுகின்றது. இறைவன் தன்னுடைய திருமறையிலே கூறுகின்றான்.

لا يعتية باطل من بين يديه ولا من خلفه تنزيل من حكيم حميد

இந்தக் குர்ஆனுக்கு இதற்கு முன்னாலும். இதன் பின்னாலும் அசத்தியம் வந்து சேர முடியாது. ஏன் என்றால் இந்தக் குர்ஆன் ஞானமிக்க, புகழ்மிக்க அல்லாஹ்விடம் இருந்து வந்த வேதமாக இருக்கின்றது. எனவே, இந்த அழைப்புப் பணியிலே தடுமாற்றம் என்றால், அந்தக் குர்ஆன் சொல்கின்ற கருத்துக்களிலே நமக்கு தடுமாற்றம் இருக்கின்றது என்று தான் அர்த்தமாகின்றது. எனவே தான் நாம் நம்முடைய அந்த அழைப்புப் பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது, நம்மைச் சுற்றி எழக் கூடிய சந்தர்ப்ப சூழ்நிலைகளினால், பல்வேறு அமைப்புக்களில் பல்வேறு அழைப்பு முறைகளினால் நாம் பாதிப்படைந்து, கொண்ட கொள்கையில் தடுமாற்றத்தைச் சந்தித்து விடுகின்றோம் சகோதரர்களே!

இது எதைக் காட்டுகின்றதென்றால், நாம் இன்னும் குர்ஆனை விளங்கவில்லை என்பதனையும், அதிலிருந்து தெளிவைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதையும் தான் காட்டுகின்றது.

இனி அந்தத் திருமறைக் குர்ஆன் எத்தகைய த.்.வா முறைகளை நமக்குக் கற்றுத் தந்திருக்கின்றது என்பதை இனி நாம் ஆராய முயற்சி செய்வோம்.

இஸ்லாமிய அழைப்புப் பணி என்பது. அல்லாஹ்வை நோக்கி அவனது கொள்கைகளை நோக்கி மக்களை அழைப்பதுவாகும். அல்லாஹ் கூறுகின்றான் :

وادع إلى ربك உங்களுடைய ரப்பை நோக்கி நீங்கள் அழைப்பு விடுங்கள்.

إنك لعلى هدى مستقيم நிச்சயமாக நீங்கள் நேரிய வழியின் மீதிருக்கின்றீர்கள். (ஹஜ்: 67)

وادعو إلى ربك ولا تكونن من المشركين

நீங்கள் இணை வைத்து வணங்கக் கூடியவராகவும் இருக்க வேண்டாம். (கஸஸ்87)

உங்களுடைய ரப்பை நோக்கி நீங்கள் அழைப்பு விடுங்கள். நிச்சயமாக நீங்கள் நேரிய வழியின் மீதிருக்கின்றீர்கள், நீங்கள் இணை வைத்து வணங்கக் கூடியவராகவும் இருக்க வேண்டாம்.

நபியே! நீங்கள் கூறுங்கள் : அல்லாஹ்வை வணங்கி அவனுக்கு இணை வைக்காதிருக்கும்படி தான் நான் ஏவப்பட்டிருக்கின்றேன். அவனை நோக்கியே நான் அழைப்பு விடுக்கின்றேன். அவனிடமே மீட்சி இருக்கின்றது என்று குர்ஆன் குறிப்பிடுகின்றது.

எனவே அல்லாஹ்வை நோக்கி முழு மனித சமுதாயத்தையும் அழைப்பது தான் இந்த அழைப்புப் பணி என்பது. அந்த அழைப்புப் பணியின் அடிப்படையில் தான் ஒரு சமூக மாற்றம் காணப்பட வேண்டும். இஸ்லாமிய சமூக அமைப்பு தோற்றுவிக்கப்பட வேண்டும். இஸ்லாமிய ஆட்சி உருவாக்கப்பட வேண்டும். அதைத் தான் நாங்கள் அகீதா என்று சொல்கின்றோம்.

அல்லாஹ்வை நோக்கி அழைப்புவிடுக்கின்ற அவனது ஆற்றல்கள், சக்தி, அவனுக்கும் இந்த உலகத்துக்கும் உள்ள தொடர்பு, அல்லாஹ் எங்களிடம் என்ன எதிர்பார்க்கின்றான் மனிதனுக்கும் இந்த பிரபஞ்சத்திற்கும் உள்ள தொடர்பு, மனிதன் எங்கே இருந்து வந்தான், எதற்காகப் படைக்கப்பட்டுள்ளான், மனிதன் எதற்காக இந்த உலகத்திற்கு வந்தான், ஏன் வந்தான், எங்கே செல்லப் போகின்றான், அந்த மனிதன் ஏதாவது ஒரு சக்திக்கு கட்டுப்பட்டு வாழத் தான் வேண்டுமா? அவன் எந்த சக்திக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டும்? இத்தகைய அடிப்படையான அம்சங்களை நோக்கி அழைப்பது தான் அழைப்புப் பணி என்பது. மேற்கண்ட அடிப்படைகளை ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் ஆழமாக அடித்தளமிடப்பட வேண்டும். இந்த அடித்தளத்தின் மீது தான் நாம் ஆசை கொண்டுள்ள அந்த முழு சமூக மாற்றம், இஸ்லாமிய சமூகம், இஸ்லாமிய ஆட்சி, இகாமத்துத் தீன் ஆகியவைகள் காணப்பட வேண்டும்.

எனவே, இந்த அடிப்படையில் நாம் அந்த ரசூல்மார்களின் அழைப்புப் பணியின் அம்சங்களைக் குறித்து ஆராய்வோம் :-

நபி மூஸா (அலை) அவர்களது வரலாற்றைப் பார்ப்போம் :-

நபி மூஸா (அலை) இத்தகைய கருத்தின் பால் தான் அன்றைய மக்களை அழைத்தார்கள். அவர்கள் வாழ்ந்த அந்தக் காலச் சூழ்நிலையில் சமூகத்தீமைகளும் இருக்கத் தான் செய்தன. அதை அல்லாஹ் கூறுகின்றான்.

وإذ نادى ربك مسى أَنِ ائْتِ القوم الظلمين ، قوم فرعون ألا يتقون

இன்னும், (நபியே!) உம்முடைய இரட்சகன், நீர் அநியாயக்கார சமூகத்தாரிடம் செல்வீராக! என (க்கட்டளையிட்டு) மூஸாவை அழைத்ததை (நீர் நினைவு கூர்வீராக!). ஃபிர்அவ்னுடைய சமூகத்தாரிடம் (செல்வீராக!) அவர்கள் (அல்லாஹ்வுக்கு) பயப்பட மாட்டார்களா? (26:10-11).

நபியே! நீங்கள் நினைத்துப் பாருங்கள். உங்களுடைய ரப்பு, மூஸா (அலை) அவர்களைப் பார்த்துச் சொன்னான். அந்த அநியாயச் சமூகத்தாரிடம் போய்ச் சொல்லுங்கள். அத்தகைய பிர்அவ்னுடைய சமூகம் பயப்பட மாட்டார்களா? என்று அல்லாஹ், இந்த அகீதா பற்றிய கருத்தைத் தான் முதலில் கூறுகின்றான். அதில் மறுமையைப் பற்றிய பயத்தைத் தான் அந்த பிர்அவ்னினுடைய சமூகத்தாரிடம் மூஸா (அலை) அவர்கள் வைத்தார்கள்.

மேலும், மூஸா (அலை) மற்றும் ஹாரூன் (அலை) அவர்களைப் பார்த்து இறைவன் கூறுகின்றான். நீங்கள் இருவரும் பிர்அவ்னிடம் செல்லுங்கள். சென்று.. .. சர்வலோக ரட்சகனின் தூதுவர்கள் நாங்கள் என்று சொல்லுங்கள் என்று இறைவன் கூறியதற்கேற்ப இறைத் தூதுத்துவத்தை முன் வைத்தார்கள். அல்லாஹ் மறுமையைப் பற்றிய நம்பிக்கையை சாடையாகச் சுட்டிக் காட்டிய பிறகு, தூதுத்துவத்தைச் சுட்டிக் காட்டி அதன் அடிப்படையில் உங்களது நோக்கத்தைச் சுட்டிக் காட்டுங்கள். அதன் அடிப்படையில் சமூத்தீமையைக் கலைக்க முயற்சி செய்யுங்கள். எனவே மூஸா (அலை) அவர்கள் இந்த அடிப்படையில் தான் அழைப்புப் பணியில் ஈடுபட்டார்களே ஒழிய, நேரடியாகச் சென்று சமூகத் தீமைகளை நோக்கி மூஸா (அலை) அவர்கள் தங்களுடைய எதிர்ப்புகளைக் காட்டவில்லை. அவற்றை எதிர்த்துக் குரல் கொடுக்கவில்லை.

மூஸா (அலை) அவர்கள் பிர்அவ்னை நோக்கி, நீ அடிமைப்படுத்தி வைத்திருக்கின்ற அந்த யூதர்களை என்னுடன் அனுப்பி வைத்து விடு என்று கேட்கின்றார்கள். அடிமைத்துவம் என்பது அங்கே யூத சமூகத்தைக் கொத்தடிமைகளாக்கி வைத்திருந்தது. அன்றிருந்த சமூகமும் அந்த நேரத்தில் அகீதாவை விட்டும் மிகத் தூரமான சமூகமாகத் தான் இருந்தது. எந்தளவுக்கெனில்,

பிர்அவ்ன் கூறினான்.

أنا ربكم الأعلى நான் தான் உங்களது உயர்ந்த ரட்சகன் என்று கூறினான்.

எவ்வளவு பெரிய தீமை!. இங்கே சகோதரர்களே! மூஸா (அலை) அவர்கள் அந்தத் தீமைகளின் மீது கை வைப்பதற்கு முன்னால், மூஸா (அலை) அவர்களுக்கு அல்லாஹ் சொன்னது, நீங்கள் போய் மனித உள்ளங்களைத் தட்டுங்கள். அந்த மனித உள்ளங்களை எந்த சம்மட்டி கொண்டு தட்டுங்கள் என்று கூறினான் என்றால், அந்த அல்லாஹ்வின் பயம் கொண்ட சம்மட்டி கொண்டும், மறுமை என்ற வாழ்வு ஒன்று உண்டு என்ற சம்மட்டி கொண்டும், உங்களுடைய தூதுத்துவம் என்ற சம்மட்டி கொண்டும் தட்டுங்கள் என்று கூறினான்.

அதாவது, அல்லாஹ் என்ற ஏகத்துவம், ரிசாலா என்ற தூதுத்துவம், ஆகிரா என்ற மறுமை என்ற இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளை அடிப்படையாக வைத்து அந்த சமூத்திற்கு அழைப்பு பணி செய்யப் பணிக்கப்பட்டார்கள். (சூரா அஃராப்)

حقيق على أن لا أقول على الله إلا الحق ، قد جئتكم ببينة من ربكم فأرسل معى إسراءيل .

நான், அல்லாஹ்வின் மீது உண்மையையன்றி (வேறு எதையும்) கூறாமலிருப்பது (என் மீது) கடமையாகும். உங்கள் இரட்சகனிடமிருந்து தெளிவான அத்தாட்சியை திட்டமாக நான் உங்களிடம் கொண்டு வந்திருக்கின்றேன். ஆதலால், நீ (அடிமைப்படுத்தி வைத்திருக்கும்) இஸ்ராயீலின் மக்களை என்னுடன் அனுப்பி வை (என்றும் அவர் கூறினார்). (07:105)

மூஸா (அலை) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வினுடைய சத்தியத் தூதனாக உன் முன் வந்திருக்கின்றேன். அந்த சத்தியத்தை உன் மீது எடுத்து வைப்பது என் மீது கடமையாக்கப்பட்டிருக்கின்றது. உன்னுடைய ரப்பின் புறத்திலிருந்து தெளிவான அத்தாட்சிகளோடு வந்திருக்கின்றேன். அந்த பனீ இஸ்ரவேலர்களை என்னுடன் அனுப்பி வைத்து விடு என்று கூறுகின்றார்கள். அதே நேரத்தில், அந்த இரு சமூகங்களிலும், குறிப்பாக பனீ இஸ்ரவேலர்களின் சமூகத்தில் தீமைகள் இருக்கத்தான் செய்தன. அந்த சமூகத்தீமைகள் ஒரு புறம் இருந்தாலும், அந்த சமூகத் தீமைகளைக் கலைவதற்கு மூஸா (அலை) அவர்களும், ஹாரூன் (அலை) அவர்களும், அந்த ஏகத்துவத்தை நோக்கியும், தூதுத்துவத்தை நோக்கியும், மறுமையை நோக்கியும் அழைத்ததன் பிறகு அந்த அழைப்போடு சேர்த்துத் தான் அந்த சமூகத் தீமைகளைக் கலைவதற்கு முயற்சி செய்தார்கள் என்பதைப் பார்க்கின்றோம். எடுத்த எடுப்பிலேயே பிர்அவ்னே! நீ இந்த பனீ இஸ்ரவேலர்களை அடக்கி அடிமைப்படுத்துவது தவறு, அவர்களை உன்னுடைய அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கத் தான் நான் வந்திருக்கின்றேன் என்று கூறவில்லை, மாறாக, அந்த ஏக இறைவனை நோக்கிய அழைப்பை விடுத்திருப்பதை நாம் குர்ஆனின் வாயிலாக தெளிவாக உணர்கின்றோம்.

பின் மூஸா (அலை) அவர்கள் ஃபிர்அவ்னின் மந்திரி சபையில் வீற்றிருந்த சூனியக் காரர்களிடம் ஏற்பட்ட போட்டியில், மூஸா (அலை) அவர்கள் இறைவனின் உதவியால் வெற்றி பெற்ற பின்பு, அந்த சூனியக்காரர்கள், நாங்கள் இந்தச் சூனியத்திலிருந்து விலகிக் கொண்டோம் என்று கூறவில்லை. மாறாக! இப்படிக் கூறினார்கள்.

قالو أمنا برب العلمين அகிலத்தாரின் இரட்சகனை நாங்கள் ஈமான் கொண்டு விட்டோம்.

என்று கூறினார்கள். ஆக, இங்கே சமூகத்தீமைகளை மட்டும் ஒழிப்பது குறிக்கோளல்ல. மாறாக அந்த சமூகத்தீமைகளின் ஊற்றுக் கண்களான, இறைவன் மீது நம்பிக்கை இல்லாமை, இறை மறுப்பு, மறுமை நம்பிக்கை இல்லாமை ஆகியவற்றைக் கலைந்து, அதன் மூலம் இறைநம்பிக்கையை ஏற்படுத்தி, அதன் மூலம் நபிமார்கள் அனைவரும் அவர்களைச் சூழ இருந்த சமூகத்தீமைகளுக்குப் பரிகாரம் தேடினார்கள்

இனி அடுத்து நபி இப்றாஹீம் (அலை) அவர்களது வரலாற்றைப் பார்ப்போம் :-

நபி இப்றாஹீம் (அலை) காலத்தில் கூட சிலை வணக்கம், பல தெய்வ வணக்கம் கொடிகட்டிப் பறந்தது. அந்த நேரத்திலும் அவர்கள் இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளின் அடிப்படையில் தான் தங்களுடைய அழைப்புப் பணியைச் செய்தார்கள் என்பதை குர்ஆனின் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

அவர் தன் தந்தையிடமும், தன் சமூகத்தாரிடமும், இச் சிலைகளென்ன? அவை எத்தகையவைளென்றால் நீங்கள் அவற்றிற்காக (வழிபடுவதில்) நிலைத்திருக்கின்றீர்கள் என்று கேட்டபோது, அவர்கள் எங்கள் மூதாதையர்கள் இவைகளை வணங்கக் கூடியவர்களாக (இருந்ததை) நாங்கள் கண்டோம் என்று கூறினார்கள். அ(தற்க)வர், திட்டமாக நீங்களும், உங்கள் மூதாதையர்களும் பகிரங்கமான வழிகேட்டில்தான் இருந்து விட்டீர்கள் என்று கூறினார். அதற்கவர்கள் நீர் எங்களிடம் ஏதும் உண்மையான செய்தியைக் கொண்டு வந்திருக்கின்றீரா? அல்லது விளையாடுபவர்களில் நீர் இருக்கின்றீரா? என்று கேட்டனர்.

அதற்கவர்: அவ்வாறு அல்ல! உங்களுடைய இரட்சகன் (அவன் தான்) வானங்களுக்கும், பூமிக்கும் இரட்சகனாவான். அவனே அவற்றைப் படைத்தான். இதற்கு சாட்சியம் கூறுபவர்களில் நானும் ஒருவனாக இருக்கின்றேன், என்று (இப்றாஹீம்) கூறினார். (அல் அன்பியா : 52-56)

இங்கே நபி இப்றாஹீம் (அலை) அந்த சமூகத்தில் நிலவிக் கொண்டிருந்த மிகப் பெரும் தீமையான சிலை வணக்கம் என்ற படுபாதகச் செயலைக் கண்டு, அந்த மக்களிடம் நீங்கள் வழிகேட்டில் இருந்து கொண்டிருக்கின்றீர்கள். வானமும், பூமியும் அதில் உள்ள அனைத்தும் அந்த ஏக இறைவனான அந்த அல்லாஹ்வுக்கே சொந்தம். அதன் ஆட்சி, அதிகாரம் எல்லாம் அவனது கைவசம் உள்ளன. அவன் நாடியது தான் நடக்கும். அவன் நாடாதது எதுவும் நடந்து விடாது, நீங்கள் வணங்கிக் கொண்டிருப்பவைகளும் அவனது ஆட்சிக்கு உட்பட்டவையே! அவனது அதிகாரத்திற்கு உட்பட்டவையே! எனவே அத்தகைய வல்லமையும், சக்தியும் கொண்ட அந்த ஏக இறைவனை வணங்குவோம் வாருங்கள் என்றும், அவனது சத்தியத் தூதை எடுத்து வைக்கும் தூதனாக நான் வந்திருக்கின்றேன் என்று அவர்கள் முன் ஏகத்துவத்தை முன் வைக்கின்றார்கள்.

இனி அடுத்து நபி நூஹ் (அலை) அவர்களது வரலாற்றைப் பார்ப்போம் :-

நபி நூஹ் (அலை) அவர்களின் சமூகம் நபிமார்களைப் பொய்ப்பித்து, மாபாதகச் செயலைச் செய்து கொண்டிருந்தது. அதை இறைவன் இவ்வாறு கூறுகின்றான்.

كذبت قوم نوح ن المرسلين، إذ قال لهم أخوهم نوح ألا تتقون

நூஹ்வுடைய சமூகத்தார் (நம்மால் அனுப்பப்பட்ட) தூதர்களைப் பொய்யாக்கினார்கள். அவர்களுடைய சகோதரர் நூஹ் அவர்களிடம் நீங்கள் (அல்லாஹ்வுக்கு) பயப்பட மாட்டீர்களா? எனக் கூறிய போது .. (அஷ்ஷுஅரா:105-106)

மேலும், அவர்களுடைய சகோதரர் நூஹ் அவர்களைப் பார்த்துக் கூறினார்.

ولقد أرسلنا نوحاً إلى قومه ، فقال يقوم اعبدوا الله ما لكم من إله غيره ، أفلا تتقون

மேலும் நிச்சயமாக நாம் நூஹை நம்முடைய தூதராக அவருடைய சமூகத்தாரின் பால் அனுப்பி வைத்தோம். அவர் அவர்களிடம் என்னுடைய சமூகத்தாரே! அல்லாஹ்வை நீங்கள் வணங்குங்கள். அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய) வேறு நாயன் உங்களுக்கு இல்லை. (அவனுக்கு) நீங்கள் பயப்பட மாட்டீர்களா? என்று கூறினார். (அல் மு.ஃமினூன்:23)

நீங்கள் பயப்பட வேண்டாமா? அந்த இறைவனைப் பயப்பட வேண்டாமா? என்று கூறினார்கள். மாற்றமாக அந்த சமூகம் செய்து கொண்டிருந்த சமூகத் தீமையைச் சுட்டிக் காட்டி, எடுத்த எடுப்பிலேயே அந்தச் சமூகத் தீமை மீது கை வைக்கவில்லை. முதலில் அவர்களுக்கு இறைவன் மீதான பயத்தையும், மறுமையையும், தூதுத்துவத்தையும் எடுத்து வைத்தார்கள். ஏன்? இந்த சமூகத் தீமைகளுக்கெல்லாம் ஒரு காரணம் இருக்கின்றது. அது தான் இந்த சமூகம் அல்லாஹ்வை மறந்து வாழ்கின்றது. தன்னை விசாரிக்கக் கூடிய சக்தி இல்லை என்று வாதாடுகின்றது. தன்னை மறுபடியும் எழுப்பி விசாரிக்கக் கூடிய சக்தி என்ற ஒன்று இல்லை என்று நினைத்துக் கொண்டிருக்கின்றது. இத்தகைய சமூகத்தில் போய் ஒட்டுப் போடுகின்ற வேலைகளைப் பார்க்க முடியாது. மாறாக அடித்தளத்தையே மாற்ற வேண்டி உள்ளது. அந்த நபி உறுதியுடன் இருந்து, கேட்கின்றார். أفلا تتقون நீங்கள் பயப்பட மாட்டீர்களா? உங்களிடம் அல்லாஹ்வைப் பற்றிய பயம் இல்லையா? எனக் கேட்கின்றார்கள்.

சகோதரர்களே, ஒரு வைத்தியன் முதன்முதலாக நோய்க்கான மருந்தை எழுதிக் கொடுப்பதில்லை. மாறாக அந்த நோய் எதனால் ஏற்பட்டது, அந்த நோய்க்கான காரணங்கள் என்ன, என்ற அந்த நோய்க்கான மூல காரணங்களை ஆராய்ந்து பார்த்து விட்டுத் தான் அந்த நோயைக் கலைவதற்கான மருந்தை எழுத ஆரம்பிக்கின்றான். அதைப் போல அந்த சமூத்தில் நிலவி வந்த அந்த சமூகத்

தீமைகளை நோக்கி எடுத்த எடுப்பிலேயே குரல் கொடுக்காமல், அந்த தீமைகள் பரவியதற்கான மூல காரணமாக அமைந்து விட்ட இறைவன் மீது நம்பிக்கை அற்ற தன்மையையும், மறுமையை மறந்து விட்ட தன்மையையும் போக்கி, அவர்களிடையே தான் கொண்டு வந்த தூதுவத்தின் மூலம் அந்த ஏகத்துவத்தையும், மறுமைப் பயத்தையும் உருவாக்குவதன் மூலம் ஒட்டு மொத்த சமூகத்தையும் சீர்திருத்துவதுடன், அதன் அடித்தளத்தை இஸ்லாமிய கோட்பாடுகளின் அடிப்படையில் புணரமைக்க, தங்களுடைய அழைப்புப் பணியை அமைத்துக் கொண்டார்கள் என்பதை மேற்கண்ட இறைவசனத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

நபி நூஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். நான் நம்பிக்கையுள்ள ரசூலாக இருக்கின்றேன். நீங்கள் அல்லாஹ்வுக்கு பயப்படுங்கள். எனக்குக் கட்டுப்படுங்கள்.

إنى لكم رسول إمين ، فاتقوا الله وأطيعون

நிச்சயமாக நான் உங்களுக்கு (அல்லாஹ்வினால்) அனுப்பப்பட்ட மிக்க நம்பிக்கைக்குரிய ஒரு தூதனாவேன் - ஆகவே, அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து கொள்ளுங்கள். இன்னும், எனக்கு நீங்கள் கீழ்ப்படிந்து நடங்கள். .. (அஷ்ஷுஃரா:107-108)

என்று கூறி உங்களுடைய நோய்க்கான காரணம் என்னவென்பதை நான் கண்டு கொண்டேன். அது தான் உங்களிடையே அகீதா என்ற இஸ்லாமிய அடிப்படை கிடையாது. எனவே, நீங்கள் இறைவனுக்குப் பயப்படுங்கள். எனக்குக் கட்டுப்படுங்கள் என்று கூறுகின்றார்கள்.

لقد أرسلنا نوحا إلى قومه فقال يقوم اعبدوا الله مالكم من إله غيره ، إنى أخاف عليكم عذاب يوم عظيم

திட்டமாக நாம், நூஹை அவருடைய சமூகத்தாரின் பால் (நம்முடைய தூதராக) அனுப்பி வைத்தோம். அப்பொழுது அவர் (அவர்களிடம்) என்னுடைய சமூகத்தாரே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் உங்களுக்கில்லை. (இதற்கு நீங்கள் மாறு செய்தால்) நிச்சயமாக, உங்களுக்கு (வரக் கூடிய) மகத்தானதொரு நாளின் வேதனையை நான் பயப்படுகின்றேன் என்று கூறினார். (அல் அஃராப் : 59)

இந்த வசனத்தை நீங்கள் ஆராய்ந்து பார்ப்பீர்கள் என்றால், முதலில் நூஹ் (அலை) அவர்கள் அந்த சமூகத்தைப் பார்த்து, என்னுடைய சமூகத்தாரே! அந்த ஏக இறையோனாம் அல்லாஹ்வை வணங்குங்கள்!, என்ற தவ்ஹீத் என்ற ஓரிறைத் தத்துவத்தை அவர்கள் முன் வைத்து விட்டு, அதன் பின் மறுமையைக் குறித்துப் பயந்து கொள்ளுங்கள். ஏனெனில் அது மகத்தான வேதனை தரக் கூடியதாக இருக்கின்றது என்று தன்னுடைய தூதுத்துவத்துடன் தவ்ஹீத் சிந்தனையையும், மறுமைப் பயத்தையும் கொண்டு தன்னுடைய அழைப்புப் பணியை ஆரம்பித்து, அதன் அடித்தளத்துடன் கூடிய சமூக மாற்றத்தைக் காண விழைகின்றார்கள்.

அவர்களுடைய சமூகத்தில் இணைவைப்புக் கொள்கை என்ற மிகப் பெரும் சமூகத் தீமை இருந்தது. அவர்களுடைய சமூகத்தில் வாழ்ந்த ஸாலிஹான நல்லவர்கள் மறைந்ததன் பின்னால், அவர்களுடைய உருவத்தை வரைந்தார்கள், பின்னர் சிலையாக வடித்தார்கள், பின்னால் அந்த ஸாலிஹான மனிதர்களை வணங்க ஆரம்பித்தார்கள். இந்தக் கொடுமையான, இறைவன் மன்னிக்காத தீமையைக் கை வைப்பதற்கு முன்னால், இந்தத் தீமையை நேரடியாகச் சுட்டிக் காட்டுவதற்கு முன்னால் தவ்ஹீத், மறுமை என்ற அடிப்படையின் கீழ் தன்னுடைய தூதுத்துவத்தை அவர்கள் முன் வைக்கின்றார்கள்.

இனி அடுத்து நபி ஹூத் (அலை) அவர்களது வரலாற்றைப் பார்ப்போம் :-

அடுத்து நபி ஹூ த் (அலை) ஆது சமூகத்திற்கு வந்தார்கள். அந்த சமூகம் செய்து கொண்டிருந்தது பற்றி இறைவன் தன்னுடைய திருமறையிலே கூறுகின்றான்.

كذبت عادن المرسلين

ஆது சமூகத்தார்கள் தங்களுடைய ரசூல்மார்களைப் பொய்ப்பித்தார்கள்.

إذ قال أخوهم هود ألا تتقون

அவர்களுடைய சகோதரர் ஹூ து அவர்களிடம், நீங்கள் (அல்லாஹ்வுக்குப்) பயப்பட மாட்டீர்களா? என்று கூறிய போது .. ..(அஷ்ஷுஅரா:123-124)

அவர்களுடைய சகோதரர் ஹூ து அவர்களை நோக்கிச் சொன்னார் நீங்கள் பயப்பட வேண்டாமா? அந்த சமூகத்தாருடன் பிறந்து வளர்ந்தவர் இந்த ஹூ து (அலை). அதனால் தான் இறைவன் தன்னுடைய திருமறையிலே, அவர்களுடைய சகோதரராகிய ஹூ து என்று கூறினான். அவர், இறைவனுக்கு நீங்கள் பயப்பட வேண்டாமா? என்று கூறியதாக இறைவன் கூறுகின்றான்.

இதில் நாம் இன்னொன்றையும் விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரு அழைப்பாளன் என்பவன் தான் வாழக் கூடிய ஒரு சமூகத்தில் தன்னை தனித்துவம் மிக்கவனாகக் காட்டிக் கொள்ளக் கூடாது. தன்னை ஒரு எல்லாம் தெரிந்த அல்லாமாக, முஃப்தியாகக் காட்டிக் கொள்ளக் கூடாது. அவர்கள் சேர்ந்து வாழக் கூடிய சமூகத்தில் ஒருவராக இருந்து, அந்த சமூகத்தினுடைய நாடியைச் சரியாகக் கணித்து அறியக் கூடிய மருத்துவனாக இருக்க வேண்டும். அந்த சமூகத்தோடு உள ரீதியாகத் தொடர்பு கொள்ள வேண்டும். அந்த சமூகத்தோடு ஆன்ம ரீதியாகத் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை இந்த வசனம் நமக்கு சூசகமாகச் சுட்டிக் காட்டுகின்றது. எனவே தான் திருமறை, அவர்களது சகோதரர் என்று குறிப்பிட்டுச் சொல்கின்றது.

إني رسول أمين ، فاتق الله و أطيعون

அந்த ஹூ த் (அலை) என்ன கூறினார். நான் அல்லாஹ்வினுடைய நம்பிக்கையுள்ள தூதுவன், அல்லாஹ்வுக்குப் பயப்படுங்கள். எனக்குக் கட்டுப்படுங்கள் என்று கூறினார்.

இறைவன் இன்னொரு வசனத்தில் கூறுகின்றான்:

وإلى أخاهم هودا ،

ஆது சமூகத்தாருக்கு அவர்களது சகோதரர் ஹூ தை அனுப்பி வைத்தோம்.

قال ياقوم العبد الله مالكم من إله غيره، أفلا تتقون

அல்லாஹ்வை நீங்கள் வணங்குங்கள். அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய) வேறு நாயன் உங்களுக்கு இல்லை. (அவனுக்கு) நீங்கள் பயப்பட மாட்டீர்களா?(7:65)

எனது சமூகமே! அல்லாஹ்வுக்கு இபாதத்துச் செய்யுங்கள். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீங்கள் பயப்பட வேண்டாமா? என்று அவர் கூறினார்.

இனி அந்தச் சமூகத்தில் என்ன தீமை இருந்தது என்பதைப் பார்ப்போம் :

ஒவ்வொரு ரசூல்மார்களும், நபிமார்களும் ஒவ்வொரு தீமைக்கு முகம் கொடுத்தார்கள். அந்தத் தீமைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவத்தில் இருந்தது. அந்தத் தீமைகளைக் கலைவதற்கு ஓரிறைத் தத்துவத்தையும், மறுமையையும் தங்கள் தூதுத்துவத்தின் மூலம் அகற்ற முயன்றார்கள்.

அது போல இந்த ஆது சமூகத்தில் சடவாதச் சிந்தனை இருந்தது. உலகமே தான் எல்லாம் என்ற போக்கு இருந்தது. இன்று இருக்கின்றதல்லவா? இந்த உலக மோகம். உலக ஆசை. அந்த உலக ஆசையின் மீதான பணத்தாசை. ஓடித் திரிகின்றோம் அல்லவா? வங்கியை நோக்கியும்! வியாபாரத்தை நோக்கியும்! காலையில் தொழ நேரமில்லை. பஸ்ஸைப் பிடித்தாக வேண்டும். எந்த வக்துத் தொழுகைக்கும் நமக்கு நேரமில்லை. தொழில் பாதிக்கப்பட்டு விடும். ஏன்? ஜு ம்ஆத் தொழக் கூட நமக்கு நேரமில்லை. அதற்காகக் கடையை அடைத்து வரக் கூட நமக்கு மனமுமில்லை. எத்தனை சகோதரர்கள் தங்களது கடையை அடைக்காமல், ஜு ம்ஆத் தொழ வராமல் இருக்கின்றார்கள். எத்தனை சகோதரர்கள் கடைசி நிமிடத்தில் வருகின்றார்கள் என்பது நாம் அறியாததல்லவா? ஏன்? காலையில் தொழிலுக்குக் கிளம்பினால் பகல் முழுவதும் தொழில்! தொழில்!! என மாரடித்து விட்டு, மாலையில் அல்லது இரவில் வீடு திரும்புபவர்ளுக்குத் தன்னுடைய சொந்தப் பிள்ளைகள் அன்று என்ன செய்தார்கள், மனைவியினுடைய நிலமை என்ன? தாய், தந்தையர்கள் எப்படி இருக்கின்றார்கள் என்பதைக் கூட அவர்களுக்குக் கவனிக்க நேரமில்லை. ஏன்? சில குடும்பங்களில் ஞாயிற்றுக் கிழமைகளில் தான் பெற்ற தந்தையின் முகத்தையும், தாயின் முகத்தையும் சரியாயகக் காண்பதற்கே அந்தப் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். இது தான் இந்த உலகே கதி என்று திரியும் மக்களின் சடவாதப் போக்கு.

மர்ஹூ ம் அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹ்) அவர்கள் சொல்வதைப் போல, இன்று இந்த உலகத்தை சடவாதப் போக்கு தான் ஆட்சி செய்து கொண்டிருக்கின்றது. மேலும், இது ஒரு கடவுளாக இன்று பின்பற்றப்பட்டும் வருகின்றது.

ردة لا أبابكر لها

இன்று இந்த உலகத்தில் ரித்ததுன் என்ற ஒரு சடவாதப் போக்கு காணப்படுகின்றது. அந்த ரித்தத்தை அழித்து ஒழிப்பதற்கு இன்று அபுபக்கர்கள் இல்லையே!! என்று அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹ்) அவர்கள் ஆதங்கப்படுகின்றார்கள். அந்த ரித்தத்!.. பள்ளி விட்டு ஆலயம் நோக்கிச் செல்கின்ற ரித்தத் அல்ல. அந்த ரித்தத்!... பள்ளி விட்டு கோயிலை நோக்கிச் செல்கின்ற ரித்தத் அல்ல. அது தான் உள ரீதியான மத மாற்றம். அது தான் உலக மோகம். அந்த உலக மோகம் என்ற கடவுளைத் தான் இந்த மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இதே போக்குத் தான் அந்த ஆது மக்களிடம் இருந்தது. அதைத் தான் தட்டிக் கேட்டார்கள் அந்த நபி. அந்த ரித்தத்தை அழித்து ஒழிப்பதற்காக அவர்கள் இந்த அகீதாவின் மீது நின்று கொண்டு சொன்னார்கள் :

பூமியில் இருக்கின்ற மேட்டு நிலங்களில் எல்லாம் பிறர் பார்த்து மகிழ வேண்டும் என்பதற்காக, தம்பங்களையும், கோபுரங்களையும் நீங்கள் அமைக்கின்றீர்களே,. இது தேவை இல்லாத ஒரு வேலை அல்லவா? ஆடம்பரமாக பெரும் பெரும் அடையாளச் சின்னங்களை எழுப்புகின்றீர்களே?! இந்த உலகத்தில் நிரந்தரமாக வாழ வந்தவர்களைப் போல ஆடம்பரமான பெரும் பெரும் கட்டடங்களை நிறுவுகின்றீர்களே?! என்று கேட்டார்கள். மேலும் .. ..

وإذا بطشتم بطشتم جبارين

மேலும், (எவரையேனும் ஏதுங்குற்றத்திற்காக) நீங்கள் பிடித்தால் (கொடூரமாக) மிக்க கொடுமையாளர்களின் பிடியாகப் பிடிக்கின்றீர்கள். (26:30)

மனிதர்களைப் பிடித்தால் அடக்கி ஆள்கின்றவர்கள் பிடிப்பதைப் போல, கடுமையாகப் பிடித்து அக்கிரமம் செய்கின்றீர்களே. அல்லாஹ்வுக்குப் பயப்படுங்கள் எனக்குக் கட்டுப்படுங்கள்.

சகோதரர்களே! இந்த சமூகத் தீமைகளை எதனூடாகக் கலையப்பட வேண்டும்? தவ்ஹீத், ரிஸாலத், மறுமை என்ற ஆகிரத்தைக் கொண்டு கலையப்பட வேண்டும். அந்த சடவாதச் சிந்தனையை மேற்கண்ட மூன்றையும் கொண்ட அஸ்திவாரத்தின் மீது நின்று கொண்டு தான் எல்லா நபிமார்களும் அவற்றைக் கலைந்தார்கள். எனவே, நாமும் அந்த அஸ்த்திவாரத்தின் மீது நின்று கொண்டு தான் அவற்றைக் கலைய வேண்டும்.

நபி ஸாலிஹ் (அலை) அவர்களது வரலாற்றைப் பார்ப்போம் :-

كذبت ثمود ن المرسلين

ஸமூது (கூட்டத்தார் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டத்) தங்களது ரசூல்மார்களைப் பொய்ப்பித்தார்கள்.

إذ قال أخوهم صالح الا تتقون

அவர்களுடைய சகோதரர் (நபியாகிய) ஸாலிஹ் அவர்களிடம், நீங்கள் (அல்லாஹ்வை) பயந்து கொள்ள மாட்டீர்களா? எனக் கூறிய போது (அவரை அவர்கள் பொய்யாக்கினார்கள்). (அஷ்ஷுஃரா : 142)

وإلى ثمود أخاهم صالحا ، قال يقوم ا عبدوا الله مالكم من إله غيره ، قد جاءتكم بينة من ربكم

ஸமூது கூட்டத்தாருக்கு அவர்களுடைய சகோதரர் ஸாலிஹையும் (நம்முடைய தூதராக அனுப்பி வைத்தோம். ) அவர் (அவர்களிடம்) என்னுடைய சமூகத்தாரே! அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். உங்களுக்கு அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயனில்லை. (இதற்காக) உங்கள் இரசட்சகனிடமிருந்து தெளிவான ஒரு அத்தாட்சி உங்களிடம் திட்டமாக வந்திருக்கின்றது. (அல் அஃராஃப் :73)

இந்தச் ஸமூது கூட்டத்தாரிடமும் சமூகச் சீர்கேடுகள் இருந்தன. இவர்களிடமும் சடவாத, உலகாதாயப் போக்கும், நாசகார வேலைகளும் இருந்தன. அதாவது,

أتتركون فى ما ههنا امنين . فى جنت وعيون . وَزُرُوْعٍ ونخل طلعها هضيم . وتنحتون من الجبال بيوتا فرهين .

இங்குள்ள (சுக போகங்களான)வற்றில் அச்சமற்றவர்களாக (இருக்க) நீங்கள் விட்டு வைக்கப்படுவீர்களா? தோட்டங்களிலும் இன்னும் நீரூற்றுக்களில்.. .. வேளாண்மைகளிலும் (மிருதுவான ஈரமுள்ள பழங்களைத் தாங்கியதாக) அவற்றின் குலைகள் இருக்கும் பேரீச்சை மரங்களிலும் (ஆகியவற்றிலெல்லாம் நீங்கள் அச்சமற்றிருக்க விட்டு வைக்கப்படுவீர்களா? இன்னும் மிகத் திறமைசாலிகளாக (ஆணவம் கொண்டவர்களாக) மலைகளில் வீடுகளைக் குடைந்து (அமைத்துக்) கொள்கின்றீர்கள். (26:146-149)

அதாவது இந்த உங்களது கண்ணைக் கவரக் கூடிய இந்தத் தோட்டங்கள் பயிர் பச்சைகள் ஆகியவற்றின் அலங்காரத்தில் உங்களை இழந்து, இறைவனின் நினைவின்றி, அவனுடைய பயம் இன்றி வாழ்கின்றீர்களே, இந்தத் தோட்டங்களும், அது தரும் கனிகளும் நிரந்தரமானவைகளா? இல்லை!. அவற்றைப் பார்க்க நீங்கள் இங்கேயே நிரந்தரமாக இருந்து விடுவீர்களா? அந்த மலைகளைக் குடைந்து ஆடம்பரமாக வீடுகளை அமைத்துக் கொள்கின்றீர்களே ... .. எனவே நீஙகள் ...

فاتقوا الله وأطيعون .

அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். இன்னும் எனக்குக் கீழ்ப்படியுங்கள், என்று கூறிவிட்டு,

ولا تطيعوا أمر المسرفين . الذين يفسدون فى الأرض ولا يصلحون .

மேலும், வரம்பு மீறுவோரின் கட்டளைக்கு நீங்கள் கீழ்ப்படியாதீர்கள். அவர்கள் எத்தகையோரென்றால், பூமியில் குழப்பம் செய்வார்கள். இன்னும் சீர்திருத்தம் செய்ய மாட்டார்கள் (என்றெல்லாம் ஸாலிஹ் நபி கூறியதற்கு),

قالوا إن كنت من المسحرين .

அவர்கள், ஸாலிஹே! நிச்சயமாக நீரோ சூனியம் செய்யப்பட்டவர்களில் உள்ளவர் என்று கூறினார்கள்.

அதாவது நம்முடைய ஏக இறைவனாம் அந்த அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள் எனக்குக் கீழ்ப்படியுங்கள். இந்த உலகில் நாசகாரம் செய்து கொண்டிருக்கின்றவர்களுடன் சேராது, அதாவது இந்த உலகத்தில் சீர்திருத்தத்தை விரும்பாது திரிகின்ற, இறைச் சட்டங்களை மீறி நடந்து கொண்டிருக்கும், அத்துமீறித் திரிகின்றவர்களுடன் சேராது, அவர்களைப் புறக்கணித்து விட்டு, அந்த இறைவனுக்குக் கட்டுப்படுங்கள், எனக்குக் கீழ்ப்படியுங்கள் என்று கூறினார்கள்.

ஆனால், இந்த ஸமூது சமூகமும் நபி ஸாலிஹ் (அலை) அவர்களைப் பொய்ப்படுத்தி விட்டது மட்டுமல்லாமல் அவர்களை சூனியம் வைக்கப்பட்டவர் என்றும் கூறியது. எனவே, இந்த நபியினுடைய காலத்திலும் மக்கள் சமூகச் சீர்கேட்டில் இறைவனை மறந்து வாழ்ந்து வந்தார்கள் என்பது தெளிவாகின்றது. இங்கேயும் நபி ஸாலிஹ் அவர்கள் மற்ற நபிமார்களைப் போலவே தவ்ஹீத், ரிஸாலத், ஆகிரத் (மறுமை) என்ற கோட்பாட்டை அஸ்த்திவாரமாகக் கொண்ட சமூகத்தைக் கட்டி எழுப்ப தங்களுடைய தூதுத்துவத்தை முன் வைக்கின்றார்களே ஒழிய, நேரடியாகச் சென்று அந்த சமூகத் தீமைகள் குறித்துப் பேசவில்லை. இனி அடுத்து,

நபி லூத் (அலை) அவர்களது வரலாற்றைப் பார்ப்போம் :-

كذبت قوم لوط ن المرسلين . إذ قال لهم أخوهم لوط الا تتقون .

இந்த நபி லூத் (அலை) அவர்களையும் அவர்களது சமூகம் பொய்ப்பித்தது. அவர்களுடைய சகோதரர் லூத் அவர்களிடம், நீங்கள் (அல்லாஹ்வைப்) பயந்து கொள்ள மாட்டீர்களா? என்று கூறிய போது,

அவர்களும் அவர்களைப் பொய்ப்பித்த பொழுது, நபி லூத் (அலை) கூறினார்கள்...

إنى لكم رسول أمين . فاتقوا الله وأطيعون .

நிச்சயமாக நான் உங்களுக்கு நம்பிக்கைக்குரிய தூதனாவேன். ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். எனக்குக் கீழ்ப்படியுங்கள். என்றும் கூறினார்.

அந்த லூத் (அலை) அவர்களுடைய சமூகத்தில் அப்படி என்ன தீமை இருந்தது? மிக மோசமான படுபயங்கரமான ஓரினச் சேர்க்கை என்ற கெட்ட பழக்கம் அவர்களிடம் மிகுந்து காணப்பட்டது. அதாவது

أتأتون الذكران من العلمين . وتذرون ما خلق لكم ربكم من ازواجكم ، بل أنتم قوم عدون

(தீய காரியத்திற்காக) அகிலத்தாரில் ஆடவர்களிடம் வருகின்றீர்களா? உங்கள் இரட்சகன் உங்களின் மனைவியரிலிருந்து உங்களுக்கெனப் படைத்ததையும் நீங்கள் விட்டு விடுகின்றீர்கள். இல்லை! நீங்கள் (அல்லாஹ்வின்) வரம்பைக் கடந்த சமூகத்தவர்கள் (என்றும் கூறினார்). (அஷ்ஷுஅரா : 165-166).

அந்த சமூகத்தைப் பார்த்த அந்த லூத் நபியவர்கள், உங்களுக்காக உங்கள் இச்சையைத் தனித்துக் கொள்வதற்காக உங்களில் இருந்தே ஒரு படைப்பாக உங்கள் மனைவிமார்களை இறைவன் ஏற்படுத்தியிருக்க, அந்த மனைவிமார்களை விட்டு விட்டு, உங்களது இச்சைகளைத் தீர்த்துக் கொள்ள

ஆண்களிடமா நீங்கள் வருகின்றீர்கள்? உண்மையிலேயே நீங்கள் அத்துமீறிய சமூகமாக இருக்கின்றீர்கள் என்று கூறினார்.

அந்த லூத் மக்களின் சமூகத் தீமையைக் கலைவதற்கு இறைவன் லூத் (அலை) அவர்கள் மூலமாக ஓர் ஏற்பாட்டைச் செய்கின்றான். அவர்கள் அந்த சமூகத்தாரிடம் சென்று, என்னுடைய சமூகத்தார்களே!, நான் இறைவன் புறம் இருந்து வந்துள்ள ஒரு உண்மையான தூதுவனாவேன். இறைவனைப் பயந்து கொள்ளுங்கள். எனக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்கள் வரம்பு மீறி நடக்க வேண்டாம் என்று கூறி, இறைவன் என்பவன் இருக்கின்றான், அவன் அனைத்தையும் கண்காணிக்கக் கூடியவனாக இருக்கின்றான். நாளை மறுமை என்ற ஒன்று இருக்கின்றது என்று கூறி, அந்த அகீதாவின் அடிப்படையில் அந்த சமூகத் தீமையைக் கலைவதற்கு தன்னுடைய அழைப்பை விடுத்திருக்கின்றார்கள் என்று மேலே கண்ட இறை வசனம் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும்,

ولوطا إذ قال لقومه إنكم لتأتون الفاحشة ، ما سبقكم بها من أحد من العلمين

லூத்தை (நம்முடைய தூதராக அவர் சமூகத்தாரிடம் அனுப்பி வைத்தோம்): அவர் தம் சமூகத்தாரிடம் மானக்கேடான (ஒரு காரியத்)தை, நிச்சயமாக நீங்கள் செய்கின்றீர்கள. உலகத்தாரில் எவரும் அதைக் கொண்டு உங்களை முந்தவில்லை என்று கூறியதை (நினைவூட்டுவீராக). (அல் அன்கபூத் : 28).

அதாவது இந்த உலகத்தில் எந்த சமூகமும் செய்திராத ஒரு மானக்கேடான ஒரு கேடு கெட்ட ஒரு தீமையை அல்லவா நீங்கள் செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டு விட்டு அல்லாஹ்வுக்குப் பயப்படுங்கள். எனக்குக் கீழ்ப்படியுங்கள் என்று கூறுகின்றார்கள். இன்று இந்த கேடுகெட்ட செயல், நாகரீகம் என்ற பெயரிலே உலகெங்கும் நடந்து கொண்டிருக்கின்றது, இந்த சமூகத் தீமை ஓரினச் சேர்க்கை என்றும், பாலியல் பலாத்காரம் என்றும், தொடர்கின்றது. இதற்கு அனுமதி கொடுத்தால் தான் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதியாக ஒருவர் வெற்றி பெற முடியும் என்ற நிலை இருந்து கொண்டிருக்கின்றது. சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் இன்று பல நாடுகளில் பரவலாக நடந்து வருகின்றது. தாய்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளில் இந்த சிறுவர், சிறுமிகளிடம் தங்களது இச்சைகளைத் தனித்துக் கொள்வதற்காகவே உலகின் வளர்ந்த நாடுகளில் இருந்து உல்லாசப் பயணிகள் என்ற பெயரில் மக்கள் கூட்டம் கூட்டமாக அந்த நாடுகளுக்கு வருகின்றார்கள் என்பதை அன்றாடம் செய்தித் தாள்கள் வழியாக நாம் அறிகின்றோம். இதற்கும் மேலாக ஒரு நாட்டில் இங்கு சிறுமிகள் விபச்சாரத்திற்குக் கிடைப்பார்கள் என்று விளம்பர போர்டே மாட்டி வைத்திருக்கின்ற அவலமும் இன்றைய உலகத்தில், இந்த அநியாயம் நடந்து வருகின்றது.

இந்த அளவு கேடுகெட்ட செயல் அந்த லூத் (அலை) சமூகத்தில் நடந்த பொழுதும், அந்த நபியவர்கள் அந்த சமூகத் தீமையை மட்டும் சுட்டிக் காட்டி தன்னுடைய அழைப்புப் பணியை வைக்கவில்லை. மாறாக, முதலில் இறைவனுக்குக் கட்டுப்பட்டு வாழுவோம், அவனுக்குப் பயந்து வாழுவோம் . வாருங்கள் என்ற அடிப்படையில் தான் தன்னுடைய தூதுத்துவத்தை முன் வைக்கின்றார்கள்.

இன்று உலக நாடுகள் இந்த பாலியல் துஷ்பிரயோகத்திற்கெதிராக போட்டு வைத்திருக்கின்ற சட்டத்தைப் போல அந்த லூத் (அலை) அவர்கள் சட்டத்தைப் போடவில்லை. அவர்கள் தங்களுடைய கைகளில் வாளை எடுத்துக் கொண்டு போராடவில்லை. மாறாக, உங்களையும் என்னையும் படைத்த அந்த வல்லவனாகிய அந்த ரப்புக்குப் பயப்படுவோம் வாருங்கள். மறுமை என்ற ஒன்று இருக்கின்றது. அங்கே நிலையான சொர்க்கமும், நிலையான வேதனையையும் கொண்டதாக அது இருக்கின்றது.

அந்த மறுமையிலே இந்த உலகத்தில் நீங்கள் செய்து கொண்டிருந்தவைகள் பற்றி கேள்விகள் கேட்கப்பட இருக்கின்றீர்கள் என்று தன்னுடைய அழைப்புப் பணியை எடுத்து வைத்ததன் மூலம், அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள், எனக்குக் கீழ்ப்படியுங்கள் என்ற கொள்கையை அடித்தளமாகக் கொண்ட, இறைவனை அஞ்சி வாழக் கூடிய சமூகத்தை உருவாக்குவதன் மூலம் ஒட்டு மொத்த சமூகச் சீர்திருத்தத்தைக் காணத் தன்னுடைய தூதுத்துவத்தை முன் வைக்கின்றார்கள்.

நபி ஷுஐப் (அலை) அவர்களது வரலாற்றைப் பார்ப்போம் :-

إذ قال لهم شعيب ألا تتقون .

(நபியாகிய) ஷுஐப், அவர்களிடம் நீங்கள் (அல்லாஹ்வை) பயப்பட மாட்டீர்களா? என்று கூறிய போது.. .. (அவரை அவர்கள் பொய்யாக்கினார்கள்).

அவர் அந்த மத்யன்வாசிகளிடம் கூறினார் :-

إنى لكم رسول أمين . فابقوا الله وأطيعون .

நான், நிச்சயமாக உங்களுக்கு நம்பிக்கைக்குரிய தூதராவேன். அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். எனக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளுங்கள்,

என்று கூறிய நேரத்தில் அந்த மத்யன் தோப்புவாசிகளும் மற்ற சமூகத்தாரைப் போலவே நபி ஷுஐப் (அலை) அவர்களைப் பொய்ப்பித்ததாகத் தன்னுடைய திருமறையிலே இறைவன் இவ்வாறு கூறுகின்றான்.

كذب أصحب لئيكة المرسلين .

(மரங்கள் அடர்ந்த பகுதியில் மத்யன் என்னும் ஊரில் வாழ்ந்த) தோப்புவாசிகளும் தூதர்களைப் பொய்யாக்கினார்கள்.

நபி ஷுஐப் (அலை) அந்தத் தோப்புவாசிகளிடம் எத்தகைய தூதை நோக்கி அழைத்தார் என்றால்,

قال يقوم العبدوا الله مالكم من إله غيره ، قد جاءتكم بينة من ربكم فاَوفوا الكيل والميزان ولا تبخسو االناس اشياءهم ولا تفسدوا فى الأرض بعد إصلاحها ، ذلكم جير لكم إن كنتم مؤمنين .

இன்னும் மத்யன் (என்னும் நகர) வாசிகளிடம் அவர்களுடைய சகோதரர் ஷுஐபை (நம்முடைய தூதராக அனுப்பி வைத்தோம்). அவர், என்னுடைய சமூகத்தாரே! அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள்: அவனைத் தவிர உங்களுக்கு (வணக்கத்திற்குரிய வேறு) நாயனில்லை. உங்கள் இரட்சகனிடமிருந்து திட்டமாக உங்களுக்குத் தெளிவான அத்தாட்சி வந்திருக்கின்றது. ஆகவே, அளவைப் பூர்த்தியாக அளந்து, எடையையும் சரியாக நிறுங்கள். (நீங்கள் கொடுக்க வேண்டிய) மனிதர்களுடைய பொருட்களில் யாதொன்றை அவர்களுக்குக் குறைத்தும் விடாதீர்கள். மேலும் பூமியில் (சமாதானம், அமைதி ஏற்பட்டு) அது சீர்திருத்தம் அடைந்த பின்னர், குழப்பத்தை உண்டு பண்ணாதீர்கள். நீங்கள் விசுவாசிகளாயின், இவை தாம் உங்களுக்கு நன்மையாக இருக்கும் என்று கூறினார். (அல் அஃராப் : 85)

நபி ஷுஐப் (அலை) கூறினார்கள். என்னுடைய சமூகத்தவர்களே, நான் இறைவனின் தூதராக உங்கள் முன் வந்திருக்கின்றேன். என்னுடைய மற்றும் உங்களுடைய இறைவனுக்குப் பயந்து வாழுவோம் வாருங்கள். அந்த அல்லாஹ்வுக்குப் பயப்படுங்கள், எனக்குக் கட்டுப்படுங்கள். நான் அந்த இறைவனிடமிருந்து தெளிவான அத்தாட்சிகளுடன் வந்திருக்கின்றேன் என்று கூறினார்கள். மேலும், நான் உங்களிடம் மிகத் தெளிவோடு தான் பேசுகின்றேன்.

இங்கே நாம் ஒன்றைக் கவனமுடன் எடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு விசயம் ஒன்று இருக்கின்றது. சத்தியப் பாதையில் லட்சியப் பயணம் மேற்கொண்டு இந்த தஃவா என்னும் அழைப்புப் பணியில் ஈடுபடக் கூடிய ஒரு அழைப்பாளருக்கு, தான் ஈடுபடக் கூடிய இந்தக் தஃவாக்களத்தைப் பற்றித் தெளிவான கொள்கைகளோடு, தெளிவான அறிவோடு அதில் ஈடுபட வேண்டும்.

இதைத் தான் நபி ஷுஐப் (அலை) அவர்கள் குறிப்பிட்டுக் கூறுகின்றார்கள். நான் அந்த ஏக இறைவனிடமிருந்து தெளிவான அத்தாட்சிகளுடன் உங்களிடம் வந்திருக்கின்றேன், என்று கூறுகின்றார்கள். எனவே, அந்தத் தெளிவு, இந்த அழைப்புப் பணியில் ஈடுபடக் கூடிய ஒவ்வொருவருக்கும் வேண்டும் சகோதரர்களே!!

அந்த நபி கூறினார்கள். நீங்கள் மனிதர்களுக்கு அளவிட்டுக் கொடுக்கும் பொழுது குறைத்து விடாதீர்கள். சீர்திருத்தம் ஏற்பட்டு விட்டதன் பின்னால், இந்தப் பூமியிலே நீங்கள் குழப்பம் விழைவித்துக் கொண்டு திரியாதீர்கள் என்று இப்படியாக ஷுஐப் (அலை) அவர்களது அழைப்புப் பணி மற்ற நபிமார்களின் அழைப்புப் பணியைப் போலவே, ஏகத்துவத்தையும், தூதுத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டும், அதன் மூலம் சமூகத் தீமையைக் கலைக்க முயற்சி செய்ததை திருமறைக் குர்ஆன் வழியாக நாம் காண்கின்றோம்.

எனவே, இப்படியாக பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த பல்வேறு நபிமார்களின் அழைப்புப் பணி எவ்வாறு இருந்தது? அதன் மூலம் அழைப்புப் பணி என்றால் என்ன? என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது.

அது தான், அல்லாஹ்வை நோக்கிய அழைப்பு!! அந்த மறுமையை நோக்கி அழைப்பு!! அந்தத் தூதுத்துவத்தை நோக்கிய அழைப்பு!! அந்த அஸ்த்திவாரத்தின் மீது இருந்து கொண்டு, சமூகத்தில் புரையோடிப் போயிருந்த தீமைகளைக் கலைய முயற்சிகளை மேற்க் கொண்டார்கள். எந்த நபியும் சமூகத்தீமையைப் பற்றி அலட்சியமாக இருக்கவில்லை. ஆனால், அந்த சமூகத் தீமைக்கான பின்னணி என்ன? அந்த சமூகத்தீமைக்கான காரணம் என்ன? அந்த சமூகத்தீமை எங்கிருந்து ஆரம்பிக்கின்றது என்பதைக் கண்டுபிடித்து, அதன் ஆணி வேரை முற்றாக அழித்தொழிப்பதற்கான மருத்துவத்தைச் செய்தார்கள். இந்த சமூகத் தீமைகளுக்கான முழுமுதற்காரணமான இறைப் பயமில்லாத நிலையை மாற்றி, அந்த ஏக இறைவனுக்குக் கட்டுப்பட்டு வாழவும், அந்த வாழ்க்கையை அந்தந்த நபிமார்கள் காட்டித் தந்த வழிமுறைப்படி அமைத்துக் கொள்ளவும் உண்டான அடித்தளத்தின் மீது தான் இந்த அழைப்புப் பணி நிறுவப்பட்டது என்பதை இது வரை பல்வேறு நபிமார்களின் சம்பவங்களில் இருந்து நாம் பார்த்தோம்.

இனி சகோதரர்களே, இறுதி நபி முஹம்மது (ஸல்) அவர்களுடைய தஃவாவிற்கு வருவோம் :-

இதற்கு முன் நாம் பார்த்த அத்தனை நபிமார்களும், ரசூல்மார்களும் எத்தகைய சமூகத் தீமைகளைச் சந்தித்தார்களோ, அதன் மொத்த வடிவத்தையும் எம் பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் சந்தித்தார்கள். அவற்றிற்கெல்லாம் முகம் கொடுத்தார்கள். அவற்றை எதிர்த்துப் போராடினார்கள்.

சிலை வணக்கம், வணக்க வழிபாடு, கொலை, கொள்ளை, விபச்சாரம், வட்டி, பெண் அடிமை, பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தல், கோத்திரச் சண்டை, அடிமைத்தும் ஆகியவை மட்டுமன்றி எண்ணற்ற சமூகத்தீமைகள் அங்கே தலைவிரித்தாடியது. இத்தகைய சமூகச் சீர்கேட்டின் உச்சத்தில் தான் முஹம்மது (ஸல்) அவர்கள் தங்களுடைய அழைப்புப் பணியை ஆரம்பம் செய்கின்றார்கள்.

இதற்கு முன் பார்த்தோமே அதே வழிமுறையின் கீழ்த்தான் அவர்களும் ஆரம்பம் செய்கின்றார்கள். அவர்கள் கூறினார்கள், நான் ரசூல்மார்களில் புதியவனல்ல. என்னுடைய கொள்கை புதிய கொள்கையல்ல.

ما كنت بدع من الرسول

எனக்கு முன் சென்று விட்டார்களே என்னுடைய சகோதரர்கள், அவர்களுடைய அழைப்புப் பணியை நான் பரிபூரணமப்படுத்த வந்திருக்கின்றேன். அந்த சங்கிலித் தொடரில் நான் இறுதியானவன் அவ்வளவே! என்று கூறினார்கள்.

எனவே. முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியது போலவும், நாம் பார்த்த அந்த ரசூல்மார்களும் ஏகத்துவம், தூதுத்துவம், மறுமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட அழைப்புப் பணியைத் தான் மேற்கொண்டிருந்திருப்பார்கள் என்பதை நாம் அறிந்து கொண்டது போலவே, அதற்கு மாற்றமானதொரு கொள்கையை முஹம்மது (ஸல்) அவர்கள் மேற் கொண்டிருக்க்க மாட்டார்கள் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

அதே அடிப்படையில் தான் முஹம்மது (ஸல்) அவர்களும் தன்னுடைய தூதுத்துவத்தை எடுத்து வைத்தார்கள். அவர்கள் அந்த மக்களைப் பார்த்துக் கூறினார்கள்.

قول لاإله إلا الله تفلحون

லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுங்கள், நீங்கள் வெற்றி பெற்று விடுவீர்கள்

என்று தன்னுடைய தூதுத்துவத்தை முஹம்மது (ஸல்)அவர்கள் முன் வைக்கின்றார்கள். நீங்கள் அந்த ஏகத்துவக் கலிமாவை முன் மொழிந்து விட்டு, அதன் அடிப்படையில் உங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்று கூறுகின்றார்கள்.

சகோரர்களே! ஏன் முஹம்மது (ஸல்) அவர்கள் அங்கிருந்து ஆரம்பிக்க வேண்டும்?! நேரடியாகத் தீமைகளை ஒழித்திருக்கலாமே? மது ஒழிப்பு, விபச்சார ஒழிப்பு, அடிமைத்துவக் கலைப்பு ஆகியவற்றிற்கெதிராக இயக்கம் நடத்தி இருக்கலாமே? ஏன் அவர்கள் அதைச் செய்யவில்லை. இறைவன் கூறுகின்றான், இத்தகைய தீமைகளுக்கு ஒரு காரணம் இருக்கின்றது. அது, அந்தச் சமூகத்திலே இறைவனைப் பற்றிய அச்சம் மங்கிக் கிடக்கின்றது. மறுமையைப் பற்றிய பயம் அற்றுப் போய் இருக்கின்றது. எல்லோரும் தான் தோன்றித்தனமாக வாழ்கின்றார்கள். எல்லோரும் தன்னிஷ்டப்படி வாழ்கின்றார்கள். தங்களை விசாரிக்கக் கூடிய ஒரு உலகம் இல்லை. தட்டிக் கேட்பதற்கு யாரும் இல்லை என்ற பொடுபோக்குத் தனத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தன்னை விசாரிக்கக் கூடிய சக்தி இல்லை என்றும் அவர்கள் வாதாடுகின்றார்கள்.

இந்த சமூகத்திலே நிலவக் கூடிய ஒவ்வொரு பிரச்னைக்கும் தனித்தனியே தீர்வு காண நீங்கள் சென்றீர்கள் என்றால், எந்தத் தீமைக்கும் உங்களால் ஒழுங்காகத் தீர்வு காண முடியாது. எனவே, பிரச்னைக்கான மூல வேரைக் கண்டு பிடித்து அதற்கான வைத்தியத்தை நீங்கள் செய்யுங்கள் என்று இறைவன் கட்டளையிடுகின்றான்.

அவர்களுடைய காலத்தில் தான் அடிமைத்துவம் இருந்தது. மனிதர்கள் விலங்குகளைப் போல சங்கிலிகளால் கட்டப்பட்டு ஆடு மாடுகளைப் போல வெவ்வேறு பிரதேசங்களில் இருந்து கொண்டு வரப்பட்டு, சந்தைகளிலே விற்கப் பட்டார்கள். யாரும் வாங்கலாம், எவ்வளவு விலை கொடுத்தும் வாங்கலாம் என்ற நிலை இருந்தது.

அரேபியாவின் வடக்கே இருந்த சிரியா ரோமர்களின் கைவசம் இருந்தது. தெற்கில் உள்ள எமன் பிரதேசம் பாரசீகர்களின் கைவசம் இருந்தது. திஹாமா, நஜ்து போன்ற பிரதேசங்கள் தவிர அனைத்துப் பிரதேசங்களையும் அரபிகள் இழந்திருந்தார்கள். அந்த அரபிகள் ரோம, பாரசீகர்களுக்கு கொத்தடிமைகளாக வாழ்ந்தார்கள். அவர்கள் கொடுக்கின்ற கூலியைப் பெற்றுக் கொண்டு வாய்மூடியவர்களாக அந்த அரபிகள் வாழந்து வந்தார்கள். வளமிக்க நாடு. ஆனால் வளமோ அந்நியர்கள் கைகளிலே!

இந்த நிலையில் தன்னுடைய தூதுத்துவத்தை ஆரம்பித்த முஹம்மது (ஸல்) அவர்கள், ஓ அரபிகளே! என் பக்கம் ஓரணியில் திரளுங்கள். அந்த ரோம, பாரசீகர்களுக்கு எதிராக நாம் போர்க் கொடி தூக்குவோம் என்று தேசிய வாதத்தையும், இன வாதத்தையும் அடிப்படையாகக் கொண்டதொரு கொள்கையை அந்த அரபிகள் முன் வைத்திருக்கலாமே!? இன்றைய அமெரிக்கா போல, வல்லரசாக அந்த ரோம, பாரசீக நாடுகள் இருந்தன. இவற்றிற்கெதிராக அந்த அரபிகளை ஒன்று திரட்டி ஒரு புரட்சியை நடத்தி இருக்கலாமே!? இந்த அடிப்படையில் தன்னுடைய அழைப்புப் பணியை ஆரம்பித்திருந்தார்கள் என்றால், அடுத்த நிமிடமே எந்த மறுபேச்சும் பேசாமல், அந்த அரபிகள் முஹம்மது (ஸல்) அவர்களின் பின்னால் அணி திரண்டிருப்பார்கள் சகோதரர்களே! அந்த தேசியவாதத்தின் அடிப்படையில் அந்த மக்களை அழைத்திருந்தால், அந்த மக்கள் முஹம்மது (ஸல்) அவர்களின் பின்னால் அணி திரண்டிருப்பார்கள். அப்படி அவர்கள் செயல்பட்டிருப்பார்களென்று சொன்னால், முஹம்மது (ஸல்) அவர்களின் அந்த மக்காவின் 13 வருட கால வாழ்க்கையில் அடிபட வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்காது. உதைபடவும், உரிமைகள் பறிக்கப்படவும், நாடு துறக்கவும், கல்லடி, சொல்லடி, சமூக பகிஷ்காரம் ஆகியவற்றைச் சந்திக்க வேண்டிய நிலை வந்திருக்காதே என்னருமைச் சகோதரர்களே! அந்த மக்களோடு மரியாதையோடும், கண்ணியத்தோடும் வாழ்ந்திருக்கலாம். அப்படி அவர்கள் செய்திருப்பார்கள் என்றால், முஹம்மது (ஸல்) அவர்களின் பக்கம் பாட்டாளி மக்களும், அடுத்த பக்கத்தில் தனவந்தர்கள், சீமான்கள், பண முதலைகள் என்ற இன்னொரு கூட்டமும் உருவாகி இருக்கும். அதற்கான நல்லதொரு வாய்ப்பும் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு உருவாகியிருந்தது.

கஃபாவில் ஹஜருல் அஸ்வத் என்னும் கல்லை வைக்கும் விவகாரத்தில் மிகவும் புத்திசாலித்தனத்துடனும், தீட்சன்யமான அறிவுடனும் செயல்பட்டு வரவிருந்த யுத்தத்தை தவிர்த்த நபியவர்களை அஸ்ஸாதிக் என்றும் அல் அமீன் என்றும் போற்றிய அந்த சமூகம், அவரது தலைமையை அந்த நேரத்திலும் ஏற்கத் தயாராக இருந்தது. அந்த முஹம்மதை நம்புவதற்கும் தயாராக இருந்தது. இருப்பினும் அந்த முஹம்மது (ஸல்) அவர்கள் அந்த மக்களை தேசியவாதத்தின் பக்கமோ அல்லது இனவாதத்தின் பக்கமோ அழைத்து, அந்த உணர்வின் அடிப்படையில் அந்த மக்களை ஒன்று திரட்டி, ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை அமைக்கவில்லை.

அவர்களுக்குத் தெரியும், நான் ரோம, பாரசீகர்களிடமிருந்து ஆட்சி அதிகாரத்தை எடுத்து இந்த அரபிகளுக்கு அதாவது அபூ ஜஹ்ல், உத்பா, ஷைபா, வலீத் பின் முகீராவிடம் கொடுக்க வந்தவரல்ல. ரோம, பாரசீக தாக்கூத்துகளிடம் இருக்கின்ற அதிகாரம் அந்த அல்லாஹ்விடம் வர வேண்டும். அந்த ஆட்சியும், அதிகாரமும் வல்ல ரப்பின் பக்கம் வர வேண்டும் என்று அவர்கள் குறியாக இருந்தார்கள். தேசியவாதத்தின் பக்கம் முஹம்மதே அவர்களை அழையுங்கள் அதன் பின் காரியத்தைக் கனகச்சிதமாக நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று அல்லாஹ் முஹம்மது (ஸல்) அவர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கவில்லை. ஏன்? எங்களைப் போன்ற மனித உணர்வுகளுடன் தான் நபியவர்கள் இருந்தார்கள். நபி தான். இறைவன் அனுப்பிய ரசூல் தான். ஆனால் சகோதரர்களே! அவர்களுக்கும் நம்மைப் போல மனம் இருந்திருக்குமே! நம்மைப் போலவே எண்ண ஓட்டங்கள் இருந்திருக்குமே!

இவ்வளவு கஷ்டப்பட வேண்டுமா? பிறந்த ஊரே என்னை ஒதுக்குகின்றதே! சரி! கொஞ்சம் சமாளித்துச் செல்வோமே! இன்றிருப்பதைப் போல சில சிலவற்றோடு சிறிது விட்டுக் கொடுத்து அனுசரித்துச் செல்வோமே என்றிருந்திருப்பார்களேயானால், அப்பொழுதே அந்த மக்கமா நகரம் முஹம்மது (ஸல்) அவர்களின் காலடியில் வந்து விழுந்திருக்கும். இந்த அடியும், உதையும், சமூக பகிஷ்கரிப்பும், சொல்லொண்ணா கொடுமைகளுக்கும் அவர்களும் அவர்களது உற்ற தோழர்களும் ஆட்பட்டிருக்க மாட்டார்களே! அல்லாஹ்ஹு த்தஆலா அந்த வேலையைச் செய்ய தம்முடைய நபிக்குக் கட்டளை பிறப்பிக்கவில்லை.

ரசூலே! முஹம்மதே! நபியே! ஒரு தாகூத்! அல்லாஹ்வுக்கு எதிராக வரம்பு மீறி, இந்த மனிதர்களை அடிமைகளாக வைத்திருக்கின்றார்களே! அவர்களிடமிருந்து ஆட்சியைப் பறித்து இன்னொரு பிர்அவ்னுக்குத் தூக்கிக் கொடுக்காதீர்கள். அந்த அதிகாரத்தை எனக்குப் பெற்றுத் தாருங்கள். நான் தான் ஆட்சி செய்ய வேண்டும்.

لله ما فى السماوت والأرض، له ملك السماوت والارض

இந்த வானம் மற்றும் பூமியில் உள்ளவை எனக்கே உரியது. அவற்றின் ஆட்சி அதிகாரம் எனக்கே உரியது.

இந்த வானம் மற்றும் புவிப்பரப்பின் ஆட்சியும் அதிகாரமும் எனக்கே சொந்தம். எனவே, நபியே! அவர்களது நோயைக் கண்டுபிடியுங்கள். அந்த லா யிலாஹ இல்லல்லாஹ் என்ற ஓரிறைத் தத்துவத்தின் பால் அவர்களை அழையுங்கள். ரோமர்களே! நீங்களும் வாருங்கள் அல்லாஹ்வின் பக்கம்! பாரசீகர்களே! நீங்களும் வாருங்கள் அல்லாஹ்வின் பக்கம்! அரபிகளே! நீங்களும் வாருங்கள்! அல்லாஹ்வின் பக்கம்!! என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அந்த மக்களை, லா யிலாஹ இல்லல்லாஹ் என்ற ஓரிறைத் தத்துவத்தின் பால் அவர்களை அழைத்தார்கள்.

அந்த சமூகத்திலே செல்வ விநியோகம் சமமாக நடைபெறவில்லை. வட்டித் தொழில் கொடிகட்டிப் பறந்தது. அன்று அவர்களுடன் வாழ்ந்த யூதர்கள் அரபிகளுடைய இரத்தத்தை வட்டித் தொழில் மூலம், அட்டைப் பூச்சி போல உறிஞ்சிக் கொண்டிருந்தார்கள். மக்களெல்லாம் கஷ்டப்பட்டார்கள். எனவே, அந்த மக்களை நோக்கி நான் ஒரு பொருளாதார சீர்திருத்தம் செய்யப் போகின்றேன். எனவே, அரபிகளே நீங்கள் வாருங்கள், என் பின்னால் ஓரணியில் திரளுங்கள் என்று கூறியிருக்கலாமே! அந்த ரசூல் (ஸல்) அவ்வாறு செய்யவில்லையே! அவ்வாறு அழைத்திருந்தால் இந்த யூதர்களைப் பூண்டோடு ஒழிக்க முஹம்மது தான் சரியான ஆள் என்று நினைத்து, முஹம்மதே! உங்களது கருத்துக்களை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம் என்று கூறி முஹம்மது (ஸல்) அவர்களது தலைமையில் ஒன்று கூடியிருந்திருப்பார்கள். அதையும் அல்லாஹ் செய்யச் சொல்லவில்லை. அதுவும் ஒரு ஒட்டு வேலை தான். எனவே. ஒட்டு வேலையை விட்டு வைத்து விட்டு, ஒட்டு மொத்தமாகப் பரிகாரம் காண முயற்சி செய்யுங்கள். இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடுகளிலே அங்கு வெடிப்பு விழுந்திருக்கின்றது. அந்த வெடிப்பைச் சரி செய்ய உங்களது அழைப்புப் பணியை ஆரம்பியுங்கள்.

இந்த செல்வத்திற்காக, பொருளாதார அடிப்படையில் அந்த அரபிகளை மேம்படுத்துவதாக இருந்தால், முஹம்மது (ஸல்) அவர்கள் உடனே அந்த ஸபா, மர்வா குன்றின் மீது ஏறி நின்று அரபிகளே நீங்கள் வறுமை வயப்பட்டவர்களாக இருக்கின்றீர்கள், கந்தல் ஆடைகளுடன் இருக்கின்றீர்கள், பாலைவனத்தைச் சோலைவனமாக ஆக்குவோம், இந்த யூதர்களுக்கு நல்லதொரு பாடம் புகட்டுவோம் வாருங்கள்!!!. அவர்களுடைய வட்டிக் கொடுமையிலிருந்து மீளுவோம்.! அவர்கள் நம்முடைய இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கின்றார்கள்!. நாங்கள் வாழப்பிறந்தவர்கள்!, ஆளப்பிறந்தவர்கள்!, மாறாக ஆளப்படுபவர்கள் அல்ல!! எனக் கூறி அவர்களை ஒன்று திரட்டியிருக்க முடியும். முஹம்மது

(ஸல்) அவர்கள் அதையும் செய்யவில்லை. இதற்குக் காரணம் அந்த இஸ்லாமிய அடிப்படைதான். அந்த இஸ்லாமிய அடிப்படை அங்கே பலவீனப்பட்டுப் போயிருக்கின்றது.

இந்த உலகத்தின் வளம் அந்த அல்லாஹ்வுக்கு உரியது. இந்த பூமி மற்றும் வானங்களின் ஆட்சி அல்லாஹ் ஒருவனுக்கே உரியது. அந்த சொத்தை நாங்கள் சமமாகப் பங்கிட வேண்டும். அந்த சொத்தை திறமையின் அடிப்படையில் மக்கள் சம்பாதித்துக் கொள்வார்கள். அந்த சொத்து இந்த உலகத்தின் குறித்த சாராருக்கு உரித்தானதல்ல. இந்தக் கருத்தை அரபிகள் விளங்கியிருக்கவில்லை. அந்த அரபிகள் கூறினார்கள். இந்த சொத்துக்கள் எங்களுக்கு உரியது. வியர்வை முத்துக்களைச் சிந்தி, நாங்கள் உழைத்துச் சேர்த்த சொத்து என்று அந்த அரபிகளும், யூதர்களும் நினைத்தார்கள். அல்லாஹ்வும், அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும் கூறினார்கள், நீங்கள் இந்த சொத்துக்கு முழு உரித்தானவர்கள் அல்ல. மாறாக, இந்த சொத்து, அதிகாரம் மற்ற அனைத்திற்கும் தற்காலிக பரிபாலகர்களே! இதற்கு நிரந்தர உரித்தானவன் அந்த அல்லாஹ் மட்டுமே! என்று தங்களுடைய அழைப்பில் குறிப்பிட்டு, வாருங்கள் நாம் அனைவரும் அந்த ஏக இறைவனுக்குக் கட்டுப்படுவோம் என்று ஓரிறையின் பக்கம் அழைத்தார்கள். அதன் மூலம் இந்த வட்டிக் கொடுமையிலிருந்து மீட்சியைப் பெற்றுத் தருகின்றேன் என்று அந்த மக்களை அழைத்தார்கள்.

அங்கு ஒழுக்க வீழ்ச்சியும் இருந்தது. அந்த ஒழுக்க வீழ்ச்சியைப் பற்றி ஆயிஷா (ரலி) அவர்களின் ஹதீஸின் வாயிலாக நாம் பார்ப்போம். அன்றைய ஜாஹிலிய்ய அரபியாவில் நான்கு வகையான திருமணங்கள் இருந்தன. ஒன்று, இன்று நம் நாட்டில் நடைபெறுவது போன்று பெண் வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும் அமர்ந்து, குறித்த மகருக்கு மணமக்களின் சம்மதத்துடன் பேசி முடிப்பது போன்ற திருமணம்.

இரண்டாவது, அவளது கணவன் சொல்வான் நீ மாதவிடாயிலிருந்து துப்புறவு ஆனதன் பின்பு, இன்னாரிடம் சென்று நீ உடலுறவு கொள்ள வேண்டும். அதன் பின்னால் அதற்குப்பின் பிறக்கின்ற குழந்தையை நான் ஏற்றுக் கொள்வேன் அல்லது ஏற்றுக் கொள்ளாமல் இருப்பேன், இல்லை உன்னை மணவிலக்குக் கூட செய்து விடுவேன் என்று சொல்வான். ஏன் இந்த முறை என்றால், தனக்குப் பிறக்கப் போகும் குழந்தை மடத்தனமாக, அறிவிலியாக சமூகத்திலே அந்தஸ்த்தில்லாததாக இருக்கும் என்று அவன் தன்னுடைய நிலையை வைத்துக் கணித்ததே காரணமாகும். தன்னுடைய அறிவாற்றல் சிந்தனை உடல் கூறு ஆகியவற்றை எல்லாம் அவன் சிந்தித்து, இன்னார் அந்தஸ்த்தில் உயர்ந்தவன், பணக்காரன் அல்லது அறிவாளி, எனவே நீ அவனிடம் உடலுறவு கொண்டாயானால் உனக்குப் பிறக்கின்ற குழந்தையும் சிறப்பானதாக இருக்கும் என்ற மடத்தனம் தான் இத்தகைய செய்கைகளுக்கு காரணமாக இருந்தது.

மூன்றாவது, ஒரு பெண்ணிடம் 10க்கும் குறைவான ஆண்கள் செல்வார்கள். அவர்கள் அனைவரும் அந்தப் பெண்ணிடம் உடலுறவு கொள்வார்கள். அதன் பின் அவள் கர்ப்பம் தரித்து, தனக்குக் குழந்தை பிறந்தவுடன், தன்னுடன் யார் யார் உடலுறவு கொண்டார்களோ அவர்கள் அனைவரையும் அழைத்து, அவளுக்கு எவன் மீது பிரியமாக இருக்கின்றதோ அவனிடம் அந்தக் குழந்தையை ஒப்படைப்பாள். அவனும் அந்தக் குழந்தையை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

நான்காவது, இன்று விபச்சாரிகள் இருப்பதைப் போல. அவர்களது வீட்டின் முன்னால் ஒரு கொடிக்கம்பம் நடப்பட்டிருக்கும். அது தான் அடையாளம். அந்தப் பெண்ணுடன் பலரும் உறவு வைத்துக் கொள்வார்கள். பிள்ளை பிறந்தால் தன்னுடன் உறவு கொண்ட அனைவரையும் அழைத்து, அந்த சமூகத்தில் வாழ்ந்த அல் காாா.ஃப்.ஃபா என்ற ஒரு பிரிவினரை அழைத்து அந்தக் குழந்தை

அவர்களில் யாருக்குப் பிறந்தது என்று அதன் உடற் கூற்றை வைத்துக் கணித்து, அந்தக் குழந்தை எவனுடைய சாயலைப் பெற்றிருக்கின்றதோ அவனிடம் அந்தக் குழந்தையை ஒப்படைப்பார்கள்.

இத்தகைய ஒழுக்க வீழ்ச்சி அந்தச் சமூகத்தில் இருந்தது. பெற்ற தாயையே மணமுடிக்கின்ற நிலமை இருந்தது. ஒரு பெண் பலரது போகப் பொருளாக இருந்தாள். அந்தப் பெண் அடிமையாக வாழ்ந்தாள், அந்தப் பெண் பலர் முன்னிலையில் நடனமாட பலர் சேர்ந்து ரசித்துப் பார்த்தார்கள். அந்தப் பெண்ணுக்கு சொத்துரிமை கிடையாது. பிள்ளை பெறுகின்ற இயந்திரமாக வாழ்ந்தாள். இன்னும் பல உரிமைகள் அவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்த வேளையிலே, அந்த சமூகத்தில் ஹனி∴புகள் என்று ஒரு குழுவினர் வாழ்ந்து வந்தார்கள், அவர்கள் நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் எச்ச சொச்ச இறைச் சட்டங்களை வழுவாது பின்பற்றியும், சிலை வணக்கத்தில் ஈடுபடாமல், பஞ்சமாபாதகங்களில் ஈடுபடாதவர்களாகவும் வாழ்ந்து வந்தர்கள். அந்த ஹனி∴புகளை நோக்கி, ஓ! ஹனீ∴புகளே வாருங்கள். ஒழுக்கச் சீர்திருத்தம் செய்வோம், ஒழுக்கச் சீர்கேட்டில் இருக்கின்ற மக்களை ஒழுக்க விழுமங்களைப் பேணிய மக்களாக மாற்றுவோம் என்று முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியிருப்பார்களேயானால், நிச்சயமாக முஹம்மது (ஸல்) அவர்கள் அந்த மக்களிடம் அடி வாங்கியிருக்க மாட்டார்கள். இறைவன் தன்னுடைய நபியை இவ்வாறு செய்யும்படி ஏவவில்லை. ஒழுக்க வீழ்ச்சிக்காக, அதனை நோக்கி அழைப்பதற்காக நீர் அனுப்பப்படவில்லை. ஒழுக்க வீழ்ச்சியா? அடிமைத்துவமா? பொருளாதார வீழ்ச்சியா? கோத்திரக் குலச் சண்டையா? பல தெய்வ வணக்க வழிபாடா? இணை வைப்பா? சமூகப்பிரச்னைகளா? சமூகத் தீமைகளா? நபியே! ரசூலே! இவற்றிற்கெல்லாம் ஒட்டு மொத்தமாகத் தீர்வைக் காண். அது தான் அல்லாஹ்வை நோக்கி அழையும்! என்று இறைவன் கூறுகின்றான். அகீதாவை நோக்கி அழைப்பு விடுப்பீராக! மறுமையை நோக்கி அழைப்பு விடுப்பீராக!

எனவே, முஹம்மது (ஸல்) அவர்கள் அந்த மக்களைப் பார்த்து, அந்த ஸபாக் குன்றின் மீது ஏறி நின்று சொல்கின்றார்கள். நாம் இங்கு காணப்படும் இந்த ஹதீஸைச் சற்று கவனமுடன் ஆராய்ந்து பார்க்க நாம் கடமைப்பட்டுள்ளோம் சகோதரர்களே! இந்த ஹதீஸின் எந்த இடத்திலாவது, முஹம்மது (ஸல்) அவர்கள் சமூகத் தீமைகளைப் பற்றிச் சொல்லியிருக்கின்றார்களா? இல்லை! காண முடியாது!!

யா! பனீ அப்துல் முத்தலிப்!! அப்துல் முத்தலிப் கிளையினரே!!! வ பனீ ∴ பஹ்ர், ∴பஹ்ர் வர்க்கத்தாரே!!! யா! பனீ நுழைர்!! நுழைர் வர்க்கத்தாரே!!!

இந்த மலையின் பின்னால் ஒரு குதிரைப்படை வருகின்றதென்று சொன்னால், என்னை நீங்கள் நம்புவீர்களா? ஆம்! நம்புவோம் என்று அந்த மக்கள் சொன்னார்கள்.

இங்கே, இந்த அழைப்புப் பணியில் ஈடுபடக் கூடியவர்கள் ஒரு முக்கியமான விசயத்தைக் கவனமுடன் நோக்க வேண்டும் என்பதற்கு இங்கே இந்த ஹதீஸில் வந்துள்ள ஆம்! என்ற சொல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இஸ்லாமியப் பிரச்சாரத்தில் ஈடுபடக் கூடிய அழைப்பாளன் தான் வாழும் அந்த சமூகத்தில் ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும். இஸ்லாத்தின் அழைப்புப் பணியில் ஈடுபடக் கூடிய ஒரு அழைப்பாளன், தன்னுடைய பிரச்சாரத்தை அந்த மக்களிடம் ஆரம்பிப்பதற்கு முன்னால், தன்னுடைய ஆளுமையை நன்றான பாதுகாத்துக் கொள்ள வேண்டும், அழைப்புப் பணியில் ஈடுபட்டதற்குப் பின்னாலும் தான். மேலும், அவன் தன்னுடைய கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும், கற்பிலே எந்தக் களங்கமும் வராமல் பாதுகாத்து, முன்மாதிரியான மனிதனாக இருக்க வேண்டும். அந்த மக்கள் முஹம்மது (ஸல்) அவர்களை அஸ்ஸாதிக் என்றும், அல் அமீன் என்றும் கூறி வந்தார்கள் என்பது, இன்றைய அழைப்பாளர்கள் எந்தளவு தான் வாழும் அந்த சமூகத்தில் ஒரு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்பதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டாகும். தனது அந்த முன்

மாதிரியைப் பயன்படுத்தி அந்த மக்களைப் பார்த்து, முஹம்மது (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர்கள் அவ்வாறு கேட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இருப்பினும் இந்த மக்கள் இப்பொழுதாவது நன்றியுள்ள மக்களாக நடக்கின்றார்களா என்று அறிந்து கொள்ளவே அவ்வாறு கேட்டார்கள். இறைவன் முஹம்மது (ஸல்) அவர்களின் நிலையைப் பார்த்துக் கூறுகின்றான்.

ووجدك ضالاً فهداى

மேலும், (வேதம் என்ன மார்க்கம் என்னவென்பதைப் பற்றி) தெரியாதவராக உம்மை அவன் கண்டான்: ஆகவே (அதற்கு) அவன் (உமக்கு) வழிகாட்டினான். (அள்ளுஹா:07)

இதற்கு முன் இந்த சமூகத்தில் உங்களுடன் நான் ஏதோ, ஏனோ என்று வாழ்ந்தேன். சீர்திருத்தம் என்றால் எனக்குத் தெரியாது. மக்களை எப்படி நேர்வழிப்படுத்துவது என்று தெரியாது, ஒரே தியானத்தில் இருந்தார்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்கள். அத்தகைய அந்த காலத்தில் தான் ஒரு முன்மாதிரியாக தான் வாழ்ந்த அந்த சமூத்துடன் கலந்து வாழ்ந்து வந்தார்கள். அந்த முன் மாதிரியைச் சாதனமாகக் கொண்டு, அதனை ஒரு வழிமுறையாகப் பயன்படுத்திக் கேட்டார்கள், இந்த மலைக்குப் பின்னாள் ஒரு குதிரைப் படை ஒன்று உங்களைத் தாக்கி அழிக்க வருகின்றது என்று சொன்னால், நீங்கள் நம்புவீர்களா? என்று அந்த மக்காவின் குறைகூஷிகளைப் பார்த்துக் கேட்ட பொழுது அவர்கள் சொன்னார்கள், ஆம்! நம்புவோம்! என்று சொன்னார்கள். மேலும் அவர்கள் சொன்னார்கள், நீர் உண்மையாளர், நம்பிக்கையாளர், வாய்மையுடன் நடக்கக் கூடியவர், நீர் மோசடி செய்யக் கூடியவரல்ல! என்றும் கூறினார்கள். அப்பொழுது, முஹம்மது (ஸல்) அவர்கள் சொன்னார்கள்,

فإني نذير اللكم بين يدى عذاب شديد

உங்களுக்கு முன்னாள் வரவிருக்கின்ற கடுமையான வேதனைமிக்க உலகம் பற்றி எச்சரிக்கக் கூடிய தூதுவன் என்று சொன்னார்கள்.

இதில் எங்கேயாவது, உங்களுக்கிடையே இருக்கும் மதுபானத்தை ஒழிக்க வந்தவன், விபச்சாரத்தை ஒழிக்க வந்தவன், சமூகத் தீமையை ஒழிக்க வந்தவன், பெண் விடுதலைக்காகப் பாடுபட வந்தவன், அடிமைகளை அதன் கொடுமைகளில் இருந்து விடுவிக்க வந்தவன், வட்டிக் கொடுமைகளில் இருந்து உங்களை விடுவிக்க வந்தவன், ஒழுக்க வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தி மேம்பாட்டைக் கொண்டு வருவதற்காக உங்களிடம் வந்திருக்கின்றேன் என்று சொன்னார்களா? அவர்கள் சொன்னார்கள், அந்த மறுமையைப் பற்றிச் சொன்னார்கள். அதன் வேதனையைப் பற்றிச் சொன்னார்கள்.

இதைக் கேட்டவுடன் தான் அபூலஹப் சொன்னான், நாசமாகப் போக! என்று முஹம்மது (ஸல்) அவர்களைப் பார்த்துக் கூறினான். சுப்ஹானல்லாஹ்!! இன்றிலிருந்து நீ நாசமாகப் போவாயாக! இதற்குத் தானா நீர் எங்களை அழைத்தீர்!! என்று கடுஞ்சினம் கொண்டு கர்ச்சித்தான் அபூலஹப். ஏனென்றால், முஹம்மது (ஸல்) அவர்களின் அழைப்புப் பணி அபூலஹப்பிற்கு உரைத்து விட்டது, முஹம்மது (ஸல்) அவர்களின் அந்த உரையின் மூலம் அவன் விளங்கினான், ஆஹா! முஹம்மது ஒட்டு வேலை பார்க்க வந்த மனிதர் அல்ல. ஒட்டு மொத்த வேலை பார்க்க வந்தவர் என்று கருதித் தான் அவன் முஹம்மது (ஸல்) அவர்களைப் பார்த்து நீர் நாசமாகப் போவீராக! என்றான். இவர் எங்களை ஒட்டு மொத்தமாக வேரறுக்க வந்திருக்கின்றார். இவரது அழைப்பு ஆட்சி அதிகாரம் கேட்டு வரவில்லை, இவரது அழைப்பு வெறும் வணக்க வழிபாடுகளை நோக்கிய அழைப்பு அல்ல, இவரது அழைப்பு வெறும் சமூக மாற்றத்தை நோக்கமாகக் கொண்ட அழைப்பு அல்ல, ஒட்டு மொத்தமாக எல்லாவற்றுக்கும் தீர்வு காண்பதற்காக வந்திருக்கின்றார் என்று தான் அவன் திட்டினான். அல்லாஹ் உடனே இறக்கினான்,

تبت يدا أبي لهب وتب

அபூலஹபின் இரு கைகள் நாசமாகட்டும்! அவனும் நாசமாகட்டும்!

முஹம்மதே! அவன் நாசமாகட்டும், நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்களுடைய கொள்கை வாழ வந்த கொள்கை. உங்களுடைய கொள்கை வாழ்வாங்கு வாழும். அவனது கரங்கள் அழிந்து போகட்டும். அவனும் அழிந்து போகட்டும். இந்த அபூலஹப், உத்பா, ஷெய்பா போன்றவர்கள் அவர்களது கொள்கைகள் தான் அழிந்து போகும், விரைவில் அழித்தொழிக்கப்படும், நீங்கள் மனவருத்தப்படாதீர்கள் என்று முஹம்மது (ஸல்) அவர்களைப் பார்த்து இறைவன் ஆறுதல் கூறுகின்றான்.

அப்பொழுது, முஹம்மது (ஸல்) அவர்கள் யா இப்னத்த முஹம்மது ஃபாத்திமாவே!! யா! ஸபிய்யத்த இப்னத்த அப்துல் முத்தலிப்!! அப்துல் முத்தலிப்பின் மகளாகிய ஸபியாவே!! மாமியாரே!! லா அம்லிக்கு லக்கும் மினல்லாஹி கைஷய்யா ஸலூனின் மிம் மாலி, ல ஸிஃதும்.

அல்லாஹ்விடத்தில் உங்களுக்காக நான் எதுவும் செய்ய இயலாது. பாத்திமாவே! நீ எனது மகள், எனது மாமியாரே! உங்களுக்காக அந்த மறுமையில் அல்லாஹ்விடத்தில் நான் எதுவும் செய்ய இயலாது. இந்த உலகத்தில் நீங்கள் என்னிடம் உள்ள சொத்துக்களைக் கேளுங்கள். நான் தருகின்றேன்.

குறைஷிகளே! நரக நெருப்பிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். யா மஃஷரல் கஃப்!! கஃப் வர்க்கத்தாரே!! அந்கிது அன்புஸக்கும் மினன் நார். நரக நெருப்பிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். யா! பாத்திமப்த பின்த முஹம்மதே! முஹம்மதின் மகளாகிய பாத்திமாவே! என்னுடைய மகளாரே! அன்கிதி நப்ஸக்கி மினன் நார்.

சத்தியமாக! அல்லாஹ்விடத்தில் உங்களுக்காக என்னால் எதுவும் செய்ய இயலாது. ஆனாலும் உங்களுக்கும் எனக்கும் உறவு முறை இருக்கின்றது. அந்த உறவு முறையை இந்த உலகத்தில் நான் நீரூற்றி வளர்ப்பேன் என்று சொன்னார்கள். சகோதரர்களே! மேலே நாம் கண்ட ஹதீஸு களிலிருந்து, அந்த சமூகத்தில் நிலவி வந்த சமூகத்தீமைகளை, தவ்ஹீத், ஆகிரத், ரிஸாலத் என்ற இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை அடிப்படையாக வைத்து தீர்க்கப் பாடுபட்டார்கள் என்று தெரிய வருகின்றது.

இறுதியாக நம்முடைய நிலமையைக் கவனிப்போம். இதுவரை ரசூல்மார்களின் தஃவா அழைப்புப் பணியின் முறைகளை உங்களுக்கு முன் வைத்தேன். நபி (ஸல்) அவர்களுடைய அழைப்பணியின் முறையையும் சுருக்கமாக உங்களுக்கு முன் வைத்தேன். இந்த அடிப்படையில் தான் நம்முடைய அழைப்புப் பணியும் ஆரம்பமாக வேண்டும். இதற்கு மாற்றமாக யாராவது கருத்தை வைப்பார்கள் என்றால், அவர்கள் இந்தக் குர்ஆன் மற்றும் சுன்னாவிற்கு எதிரான கருத்தை முன் வைக்கின்றார்கள் என்று தான் அர்த்தமாகும். இஸ்லாமிய அழைப்புப் பணி எங்களது பரம்பரைச் சொத்தல்ல. அல்லாஹ்ஹுத்தஆலாவின் சொத்து. அவன் எவ்வாறு இந்த இஸ்லாமிய அழைப்புப் பணியை செய்யத் தூண்டியுள்ளானோ அதன்படி தான் நாம் நம்முடைய அழைப்புப் பணியைச் செய்ய வேண்டும். நாங்கள் வாழ்கின்ற சூழல் அது எங்களது இஸ்லாமிய சமூகச் சூழலாக இருக்கலாம். அல்லது எங்களது முஸ்லிம்களது சமூகச் சூழலாக இருக்கலாம். இப்பொழுது இப்படிச் சொல்வதற்கும் தயக்கமாக இருக்கின்றது. நீங்கள் எல்லாம் பைஅத் செய்த முஸ்லிம்களா? என்ற கேள்விகள் எல்லாம் பிறப்பதால், சரி! நாங்கள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் முஸ்லிம்கள்! அந்த முஸ்லிம் சமூகத்தை எடுத்து நோக்குவோம். அல்லது இந்த நாட்டின் சூழலை எடுத்து நோக்குவோம். ஒரு அழைப்பாளன் தான் ஒரு சமூகத்தின் முன்னால் நின்றால், அந்த சமூகத்தினுடைய பொதுவான சூழல் பற்றி ஆராய

வேண்டும். அவனும் அந்த சமூகத்தில் வாழ்கின்ற மக்களும், அந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து நம்பிக்கைகளைக் கொண்ட பல் சமுதாய மக்களும் அந்த ஏக இறைவனாம் அல்லாஹ்வின் படைப்பினங்கள் என்ற மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். அந்த மனிதன் முஸ்லிமாக இருக்கட்டும் அல்லது அவன் இந்துவாக அல்லது கிறிஸ்த்தவனாக அல்லது எந்தச் சிலையையும் வணங்கக் கூடியவனாக அல்லது நாத்திகச் சிந்தனையுடையவனாக இருக்கட்டும். யாராக இருக்கட்டும்! அவர்கள் அனைவரும் அல்லாஹ்வினுடைய அடிமைகள் என்ற உணர்வு தான், இந்த அழைப்புப் பணியில் ஈடுபடுகின்ற ஒருவருக்கு முதலில் பிறக்க வேண்டும். இந்த உணர்வோடு தான் தன்னுடைய அழைப்புப் பணியில் ஈடுபட வேண்டும். இந்த உணர்வுகளுடன் தான் எமக்கு முன்னால், அந்த ரசூல்மார்களும், அந்த நபிமார்களும் சந்தித்த அனைத்துத் தீமைகளும் இருக்கின்றன. அதிலே யாருக்கும் எந்த கருத்து வேறுபாடும் கிடையாது. கருத்து வேறுபாடு எதில் என்றால், அதிலே சில மாற்றங்கள் நடந்து வந்திருக்கின்றன. அது தீமைகள் தானா என்பதிலே கருத்து வேறுபாடு. அவ்வளவு தான். அன்று வாளால் வெட்டினார்கள். இன்று துப்பாக்கி, வெடி குண்டு, என்று பயன்படுத்தப்படும் பொருள் மாறியுள்ளது. அன்று திராட்சை மற்றும் பேரீச்சம் பழத்தில் செய்த ரசத்தை மதுவாக அருந்தினார்கள். ஆனால் இன்று அவற்றிற்கு வேறு பெயர் சூட்டப்பட்டு அருந்துகின்றார்கள். அன்று ஒளிவு மறைவாக விபச்சாரம் நடந்தது. இன்று சட்ட ரீதியாக 5 நட்சத்திர ஓட்டல்களிலும், விபச்சார விடுதிகளிலும் நடக்கின்றது. அன்று பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தார்கள். இன்று இரண்டையும் குடும்பக் கட்டுப்பாடு என்ற பெயரில் புதைக்கின்றார்கள். எந்த வித்தியாசமும் கிடையாது. மனிதனின் சிந்தனைப் போக்கிலே எந்த வித்தியாசமும் கிடையாது. காலமும், அதைச் செய்கின்ற வழிமுறைகளும், அதற்குப் பயன்படுகின்ற சாதனங்களும் மாறியுள்ளன. அவ்வளவுதான் வித்தியாசம். எனவே, அனைத்துத் தீமைகளும் நம்மைச் சுற்றி உள்ளன. ஷிர்க் - அன்று லாத், மனாத், உஸ்ஸா வைச் சந்தித்தார்கள். இன்று நாங்கள் வேறு வகையான சிலைகளைப் பார்க்கின்றோம். அது தான் வித்தியாசம். அவைகள் நிமிர்த்தி வைத்து வணங்கப்படுகின்றது. நம்முடைய சமூகத்தில் படுக்க வைக்கப்பட்டு வணங்கப்படுகின்றது. அவ்வளவு தான் வித்தியாசம். குஃப்ர் என்ற இறை நிராகரிப்பு இருக்கின்றது. தீன்கள் இருந்தது. இன்று இந்து, கிறிஸ்த்தவம், பௌத்தம் என்று பல்வேறு வழிமுறைகளைக் கொண்ட தீன் (மார்க்கங்)கள் இருக்கின்றன. அது மாத்திரமல்ல. அன்றும் கொள்கைகள் இருந்தன. இன்றும் கொள்கைகள் கோட்பாடுகள், சித்தாந்தங்கள் இருக்கின்றன. அன்று நாங்கள் பார்த்தோம். பெரும்பாவங்கள், தீமைகள் கொடிகட்டிப் பறந்தன. இன்றும் அவைகள் இருக்கின்றன.

இன்று நம்முடைய மார்க்கத்திலே அந்த அல்லாஹ்வும், அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும் பூரணப்படுத்திய மார்க்க விவகாரங்களுக்கு அடுத்து, மேலதிகமாகச் செய்கின்றோம் என்ற அடிப்படையில் ஏராளமான நூதனக் கிரியைகள், பித்அத்க்கள் இருக்கின்றன. இவைகள் அனைத்தையும் நாங்கள் தீமைகள் எனக் கருதுகின்றோம். இவற்றை ஒழித்து விட்டு, முழுமையாக இறைவனின் பக்கம் திரும்புகின்ற சமூதாயத்தை உருவாக்க விரும்புகின்றோம். இதில் யாருக்கும் எந்த கருத்துவேறுபாடும் இருக்க முடியாது. இந்த நேரத்தில் நாம் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய அம்சம் என்னவெனில், இந்த சந்தர்ப்பத்தில், இன்று இருக்கின்ற சூழலில் எங்கிருந்து நம்முடைய அழைப்புப் பணியை ஆரம்பம் செய்வது. நாங்கள் அந்த ரசூலுல்லாஹ் செய்ததைப் போலத் தானே செய்ய வேண்டும்! அந்த ரசூல்மார்கள் செய்ததைப் போலத்தானே செய்ய வேண்டும். இந்தத் தீமைகளைக் களைந்து சமூக மாற்றம், சமூக எழுச்சி, சமூக அமைப்பு, தீனை நிலைநாட்டுதல், இஸ்லாத்தை மேலோங்கச் செய்தல், கிலாபத் ஆகியவற்றிற்கு அடித்தளமாக இந்த அகீதாவைத் தான் அமைக்க வேண்டும். நாமும் இந்த கருத்தின் அடிப்படையில் தான், மேற்கண்ட மாற்றங்களைக் காண வேண்டுமே

ஒழிய, இந்த அகீதாவை ஓரம் தள்ளி வெறும் பிரச்சாரம் மட்டும் செய்ய முடியாது. அப்படிச் செய்வோமானால், எந்த மாற்றமும் உருவாகாது. மறுபடியும், மறுபடியும் செய்து கொண்டிருக்க வேண்டும். அதில் எந்த மாற்றத்தையும் நம்மால் காண முடியாது. எனவே தான் நாங்கள் பரிபூரணமாக ஒட்டு மொத்தமாக இஸ்லாமியக் கோட்பாடுகளின் அடிப்படையில் நம்முடைய அழைப்புப் பணியைச் செய்யும் பொழுது தான் நாம் அதன் முழுப் பயனையும் அடைய முடியும்.

அந்த அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், தன்னுடைய 13 வருட கால அழைப்பின் பொழுது, இந்த இஸ்லாமியக் கோட்பாடுகளின் அடிப்படையில் நின்று கொண்டு தான், அந்த கருத்தின் அடிப்படையில் தான் தன்னுடைய அழைப்பை விடுத்துக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வும், தவ்ஹீத், மறுமை, ஆகியவற்றைக் கொண்ட வசனத்தைத் தான் இறக்கிக் கொண்டிருந்தான். மக்காவிலே அந்த மக்கள் பக்குவப்படும் வரைக்கும் இப்படிப்பட்ட வசனங்களை இறக்கி இறக்கி, அந்த மனித உள்ளங்களைப் பக்குவப்படுத்தி வந்து, பக்குவப்பட்டதன் பின் அவர்களாகச் சட்டம் கேட்டார்கள். அவர்களாக சமூக மாற்றம் கேட்டு வந்தார்கள், அவர்களாக சமூக அமைப்பை மாற்ற வேண்டி நின்றார்கள், அப்பொழுது தான் கேட்டார்கள், எஸ்அலூனக்க அனில் கம்ரி வல் மைஸிர்.

يسئلونك عن الخمر والميسر

மதுபானத்தைப் பற்றியும், சூதாட்டத்தைப் பற்றியும் கேட்கின்றார்கள் நபியே! (2:219)

அவர்கள் அவ்வாறு கேட்கின்றார்கள் என்றால், அவர்களது மனம் பக்குவப்பட்டு விட்டது என்று தானே பொருள். அதன் பின்னால் தான் இறைவன் கூறுகின்றான், அவற்றில் பாவமும் இருக்கின்றன. நலமும் இருக்கின்றன. ஆனால் நல்லதை விட பாவம் அதில் மிகைத்திருக்கின்றது. எனவே, அவற்றை உங்களுக்கு தடை செய்கின்றோம் என்று கூறினான்.

வட்டி எப்பொழுது ஒழிக்கப்பட்டது. சூதாட்டம் எப்பொழுது ஒழிக்கப்பட்டது. சாதியக் கொடுமைகள், அடிமைத்துவம், பெண்ணடிமை இவை எல்லாம் அந்தப் பக்குவம் ஏற்பட்ட பின்தான் ஒழிக்கப்பட்டது. அல்லாஹ்ஹு த்தஆலா இத்தகைய சட்டங்களை மதினாவில் இறக்கி, சமூக மாற்றத்தை உருவாக்கினான். அப்படி என்றால், தீமையைப் பற்றி மக்காவிலே முஹம்மது (ஸல்) அவர்கள் எதனையும் சொல்லவில்லையா? சொன்னார்கள்!! சூசகமாகச் சொன்னார்கள். அந்த ரசூல்மார்களும் அதைத் தானே செய்தார்கள்.

இப்படிச் சொல்லிக் கொண்டு நாம் செல்லும் பொழுது, உங்களுக்கு ஒரு சந்தேகம் வரலாம். நீங்கள் என்ன வானத்திற்கு அப்பாலும், பூமிக்குக் கீழேயும் நடப்பவற்றை மட்டும் பேசுகின்ற ஆள் போல அல்லவா இருக்கின்றீர்கள் என்று உங்களுக்கு சந்தேகம் வரலாம்!? அந்த சமூகத்தீமைகளை ஒழிக்க உங்களுக்கு மனமில்லை போல என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம். அந்தக் கருத்தை உடையவர்கள் அல்ல நான். நன்மையை ஏவுவோம், தீமையைத் தடுப்போம். ஆனால், இந்த அஸ்த்திவாரத்தின் மேல் நின்று கொண்டு தான் அதனைச் செய்வோம். சமூகத் தீமைகளா? இந்த அஸ்த்திவாரம் தான். இதன் மூலம் தான் தீர்வு காண்போம். எனவே, மக்களை இதனை நோக்கித் தான் அழைப்பு விடுப்போம். அந்த அழைப்பின் ஊடாகத் தான் மாற்றம் காணப்பட வேண்டும்.

அந்த அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தங்களுடைய பிரச்சாரத்தை மேற்கொண்ட வேளையில் கூறினார்கள் : அளவையில், நிறுவையில் மோசடி செய்பவர்களுக்கு வைல் என்னும் நரக ஓடை தான் தங்குமிடமாக இருக்கும். அதை தான் திருமறை

ويل للمطففين . الذين إذااكتالو اعلى الناس يستوفون. وإذا كالو هم أووزنو هم بخسرون . الايظن أولئك أنهم مبعوثون

யார் அவர்கள்?! அவர்கள் மனிதர்களிடமிருந்து அளந்து எடுத்தால், பரிபூரணமாக அளந்து எடுப்பார்கள். மனிதர்களுக்கு அளந்து நிறுத்துக் கொடுத்தால் குறைத்து விடுவார்கள். அவர்கள் நினைக்க வேண்டாமா? அந்த மகத்தான நாளின் வேதனையைப் பற்றி அவர்கள் நினைக்க வேண்டாமா? என்ற மறுமையை அடிப்படையாகக் கொண்ட வசனத்தைச் சுட்டிக் காட்டி, அந்த சமூக மாற்றத்தைக் காண அவர்கள் விழைந்தார்களே!! அதைத் தான் இந்த வசனத்தின் மூலம் இறைவன் கேட்கின்றான் :

(அளவையிலும், எடையிலும் மோசம் செய்து) குறைக்கக் கூடியவர்களுக்கு கேடு உண்டாவதாக! அவர்கள் எத்தகையவர்கள் என்றால், (தங்களுக்காக) மனிதர்களிடமிருந்து அளந்து வாங்கினால், நிறைவாக (அளந்து) வாங்கிக் கொள்கின்றனர். (ஆனால்) தாங்கள் அவர்களுக்கு (-மற்ற மனிதர்களுக்கு) அளந்து கொடுத்தாலும் அல்லது அவர்களுக்கு நிறுத்துக் கொடுத்தாலும் (குறைத்து மோசடி செய்து அவர்களை) நஷ்டப்படுத்தி விடுகின்றனர். அத்தகையோர் - நிச்சயமாக, தாம் (மறுமையில் உயிர் கொடுத்து) எழுப்பப்படுவார்கள் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லையா? (83:1-4)

திருமறைக் குர்ஆனில் எங்கு திருப்பிப் பார்த்தாலும், சமூக சீர்கேடுகளைப் பற்றிக் கூறி எச்சரிக்கை விடுக்கும் பொழுதெல்லாம், தன்னைப் பற்றியும், தன்னுடைய வல்லமையைப் பற்றியும், மறுமையைப் பற்றியும், அதன் மகத்தான வேதனையைப் பற்றியும் எச்சரிக்கை செய்யாமல் அன்றி, வெறுமனே அந்த சமூகச் சீர்கேடுகளை மட்டும் கண்டித்து வசனம் இறக்கவில்லை என்பதை ஆராய்ந்து பார்த்தால் நமக்கு நன்றாக விளங்கக் கூடியதாக இருக்கும் சகோதரர்களே!

அதேபோல வட்டியைப் பற்றிக் கூறும் பொழுது, வட்டியை வாங்காதீர்கள். நாளை அல்லாஹ்விடத்தினிலே நீங்கள் நிறுத்தப்படுவீர்கள். நீங்கள் செய்பவற்றுக்கு பரிபூரணமாகக் கூலி வழங்கப்படும். வட்டிக்கும் மறுமைக்கும் என்ன சம்பந்தம் சகோதரர்களே! வட்டிக்குப் பரிகாரம் காண வேண்டுமா? அதை வெறும் சமூகத்தீமை என்ற நோக்கில் அல்லாது மறுமையைச் சுட்டிக் காட்டி அதன் வேதனையைச் சுட்டிக் காட்டித் தான் அதன் தீமைகளைக் களையும் உத்தவிடப்பட்டது.

இறைவன் கூறுகின்றான் : மறுமையைப் பொய்ப்பித்தவனைப் பார்த்தீரா? யாரவன்? நாம் நினைத்திருப்போம். அந்த மனிதன் இறைவனையும், அந்த மறுமை நாளையும், சொர்க்கத்தையும், நரகத்தையும் பொய்ப்பித்திருக்கலாம் என்று தானே நாம் நினைத்திருப்போம்! ஆனால் இறைவன் அதற்கு விந்தையானதொரு பதிலைக் கூறுகின்றான். அதாவது,

إرءيت الذى يكذب بالدين . فذالك الذى يدع اليتيم . و لا بحض على طعام المسكين . فويب للمصلين . الذين هم عن صلاتهم ساهون . الذين هم يراءون . ويمنعون الماعون .

(நபியே! மறுமையில் நல்லவற்றுக்கு நற்கூலியும், தீயவைகளுக்கு தண்டனையும் வழங்கப்படும்) நியாயத் தீர்ப்பைப் பொய்யாக்குவோனை நீர் (கவனித்துப்) பார்த்தீரா? ஆகவே, அத்தகையோனே அனாதைகளை (ஈவிரக்கமின்றி) விரட்டுகின்றான். எனவே, தொழுகையாளிகளுக்குக் கேடு தான். அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் தொழுகையை (நிறைவேற்றுவதை) விட்டும் பாராமுகமாக இருப்போர். அத்தகையோர் தான் (மற்றவர்களுக்குக்) காண்பிக் (கவே தொழு)கிறார்கள். மேலும், (அன்றாடம் உபயோகமாகும்) அற்பமான பொருட்களை (மற்றவர்களுக்குக் கொடுப்பதை விட்டும்) தடுக்கின்றார்கள் (107:1-7).

எனவே இந்தச் சமூகத்தில் தீமைகள் யாவும் அந்த அகீதாவின் அடிப்படையில் தான் களையப்படும். அதன் அஸ்த்திவாரத்தின் மீது தான் சமூக மாற்றம் காணப்பட வேண்டும்.

மேலும், ஷஹீத் செய்யித் குதுப் (ரஹ்) அவர்கள் கூறியது போல, அவர்கள் சொல்கின்ற கருத்தைச் செவிமடுக்கின்ற ஒவ்வொரு அழைப்பாளனும் அவற்றைத் தன்னுடைய கவனத்திலே இறுத்திக் கொள்ள வேண்டும். இந்த மார்க்கத்தைப் பரிபூரணமாகக் கட்டி எழுப்ப முயன்று கொண்டிருக்கும் ஒவ்வொரு அழைப்பாளனும் கவனத்தில் கொள்ள வேண்டும். என்னவென்றால், அவர்கள் இந்த முழு சமூகத்தையும், அதில் உள்ள இந்த முஸ்லிம் சமூகத்தையும் கூட இந்த அகீதாவின் பால் தான் அழைக்க வேண்டும். அவர்கள் தங்களை முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொண்டாலும் சரியே! எப்படிச் சொல்கின்றார்கள் என்றால்,

حتى لو كانو يدءون أنهم مسلمين

அவர்கள் தங்களை முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொண்டாலும் சரியே!

وتشهد لهم شهادة الميلادي بأنهم مسلمون

அவர்களது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அவர்களை முஸ்லிம்கள் என்று சான்று பகர்ந்தாலும் சரியே!

அவர்களையும் இந்த அகீதாவை நோக்கித் தான் அழைக்க வேண்டும். ஏன்? அந்த அகீதா பலவீனப்பட்ட சமூகமாக அது இருக்கின்றது. மதினாவிலும் அல்லாஹ் அதனை விடவில்லை. சொன்னான் .. .. ..

يأيهالذين أمنو اٰمِنُو

மூ..மின்களே! நீங்கள் ஈமான் கொள்ளுங்கள்.

இங்கே ஈமான் கொண்டவர்களைப் பார்த்து, ஈமான் கொண்டவர்களே! ஈமான் கொள்ளுங்கள் என்று ஏன் மறுபடியும் சொல்கின்றான்? இந்த அழைப்புப் பணியானது ஒரு காலத்தில் தொடங்கப்பட்டு மறுகாலத்தில் விடப்பட வேண்டிய அவசியமில்லை. ஒரு மனிதன் இறக்கும் காலம் வரைக்கும் சொல்லப்பட வேண்டிய கடமை. அந்தக் கருத்தின் அடிப்படையில் தான் இறைவன் இவ்வாறு கூறியிருக்கின்றான்.

அதைத் தான் ஷஹீத் செய்யித் குதுப் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள். அப்படிப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் அவர்கள் முஸ்லிம்கள் என்று வைத்துக் கொண்டாலும், அவர்களையும் நீங்கள் அகீதாவை நோக்கியே அழையுங்கள், அவர்களுக்கு மத்தியில் இருக்கின்ற தீமைகளை நீங்கள் களைய முயற்சிக்கின்ற பொழுது, இந்த அடிப்படையிலேயே நீங்கள் அவற்றைக் களையுங்கள். இதனை அடிப்படையாகக் கொண்ட அகீதாவின் அடிப்படையில் அவற்றைக் களையப் பாடுபடுங்கள் என்று அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். எனவே, நாங்கள் யோசிக்க வேண்டும். எங்களது அழைப்புப் பணி எவ்வாறு இருக்க வேண்டும்?!. எங்களது அழைப்புப் பணியைப் பற்றி எங்களுக்குப் பூரண விளக்கம் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

எனவே, இந்த அடிப்படையில் நாங்கள் அழைப்புப் பணியை மேற்கொள்கின்ற பொழுது தான், அது பூரண வெற்றியைத் தரும். இந்த அடிப்படையில் அல்லாமல் கூட மனிதர்கள் சமூக மாற்றங்களைக் கொண்டு வருகின்றார்கள். எதனால்? மனிதன் இயற்றுகின்ற சட்டத்தால், ஆயுதத்தால், ராணுவத்தால்!! ஆனால், அவை யாவும் தற்காலிகமான பலனைத் தான் கொடுக்கின்றன. கொடுத்துக் கொண்டிருக்கின்றன. நமக்குத் தெரியும். கம்யூனிஸம்!! அது 73 வருடங்களில் கலாவதியாகி விட்டது. இன்னும் சில நாடுகளில் தொண்டைக்கும் நெஞ்சுக்கும் இழுத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். அந்த சிந்தனைப் போக்கு எங்களுக்கு வரக் கூடாது. நம்முடைய சமூகத்தில் இருக்கின்ற

தீமையாகட்டும் அல்லது இந்த நாட்டில் நிலவுகின்ற தீமைகளாக இருக்கட்டும், அவைகளை எல்லாம் கலைவதற்கு நாம் இந்த அடிப்படையில் தான் அழைப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும்.

எங்கள் சமூகத்தில் உள்ள பெரும் பெரும் தீமைகளான விபச்சாரம், போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல், இப்படியான கடுமையான தீமைகள், கிரியைகள், பித்அத்துக்கள் என்ற நூதன கிரியைகள் இவைகள் எல்லாவற்றுக்குமே தனித்தனியாக பரிகாரம் காணுவதை விட, ஒட்டு மொத்த பரிகாரம் காண வேண்டும். அதனடிப்படையில் சமூக மாற்றம் காணப்பட வேண்டும்.

அப்படியல்லாமல், மனிதச் சட்டங்களால், ராணுவத்தால் அல்லது வற்புறுத்தலால், அடக்குமுறைகளால் கொண்டு வரப்படக் கூடிய சட்டங்கள் யாவும் தற்காலிக பலனைத் தான் தரும். நிரந்தரப் பலனைத் தர முடியாது. அதிலே ஓட்டை உடைசல்கள் இருப்பதைப் பார்க்கின்றோம். சட்டம் இயற்றியவர்களே அதனை மீறுகின்ற காட்சிகளை நாம் அன்றாடம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இதிலிருந்து தெரியவில்லையா? அவைகள் எல்லாம் எளியோரைத் தாழ்த்தவும், வலியோரை வாழ வைக்கவும் வந்த சட்டங்கள் என்று? ஆனால் அந்த ஏக இறையோனாம் அல்லாஹ் வகுத்தளித்த அந்தச் சடடங்கள் எளியோருக்கும், வலியோருக்கும் பொதுவான சட்டங்களே! அதனூடாகத் தான் நாம் அந்த சமூக மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.

அதுமட்டுமல்ல!! இந்த மார்க்கம் யூகங்களைக் கொண்டும், கற்பனைகளைக் கொண்டும் செயல்படுத்த வந்த மார்க்கமல்ல. இது நடைமுறையோடு ஒத்துச் செல்கின்ற மார்க்கம். இறைவன் தன்னுடைய அனைத்துச் சட்டங்களையும் மக்காவில் இறக்கி வைத்துக் கொண்டு மதினாவிலே அந்தச் சட்டங்களை அமுல் நடத்தவில்லை. மக்களின் பிரச்னைகள், அவர்கள் எழுப்புகின்ற கேள்விகள், அவற்றை அந்தந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப சட்டங்களை இறக்கி, அந்த சமூக மாற்றத்தை அவன் உருவாக்க நாடினான். அது வரைக்கும் அந்த மக்கா வாழ்க்கையிலே, இயற்றி இருக்கின்ற சட்டங்களைப் பூரணமாக அமுல்படுத்தித் தங்களுடைய வாழ்க்கையிலே அவற்றைப் பூரணமாகக் கடைபிடிப்பதற்காக அந்த மக்களுடைய மனங்களிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த, அவர்களது மனங்களைப் பண்படுத்தக் கூடிய வேலையைத் தான், இந்த அடிப்படையை வைத்துத் தான் முஹம்மது (ஸல்) அவர்கள் அந்த மக்களுக்கு அழைப்புக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த ஏகத்துவம், ஆகிரத், ரிஸாலத் என்றஅடிப்படையை நோக்கித் தான் அந்த மக்களை அழைக்கும்படி இறைவன் அறிவுறுத்தினான்.

இது தான் நம்முடைய அழைப்புப் பணி. இது தான் அல்லாஹ்வும் அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும் அறிவுறித்திய அழைப்புப் பணி. இந்த அழைப்பு அல்லாஹ்வை நோக்கியும், அவனது மறுமையை நோக்கியும், தூதுத்துவத்தையும் நோக்கியும் விடுக்கின்ற அழைப்பாகும். அல்லாஹ்வை வணக்கத்திற்குரியவனாக ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லாஹ்வை உதவி செய்யக் கூடியவனாக ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லாஹ்வைச் சட்ட கர்த்தவாக ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களை விசாரிக்கக் கூடியதொரு உலகம் இருக்கின்றது. இந்தக் கருத்தை ஆழமாக அழுத்திச் சொல்லி, மக்கள் மனங்களிலே இந்த அடிப்படையை ஆணித்தரமாகப் பதிய வைக்கக் கூடியதாக, இவற்றை மட்டுமே நோக்கமாகக் கொண்ட அழைப்பாக நம்முடைய அழைப்புப் பணி இருக்க வேண்டும். அது தான் நம்முடைய முதன்மையான அழைப்புப் பணியாக இருத்தல் வேண்டும். அதற்கு உதவி செய்யக் கூடிய வகையில் தான் நம்முடைய ஏனைய சமூகத் தொண்டுகள், சேவைகள் அமையலாம்.

சகோதரர்களே! மேற்கண்ட அடிப்படையைக் கொண்ட அழைப்புப் பணி என்பது இலக்கு. சமூகத் தொண்டுகளும், சேவைகளும் அதன் சாதனங்கள். சாதனங்கள் இலக்காக முடியாது. இலக்கு சாதனமாக முடியாது. எனவே, இலக்கை நோக்கிய பயணத்தில் அந்த சேவைகளையும் தொண்டுகளையும் சாதனமாகத் தான் கொண்டு செல்ல வேண்டும்.

நாம் இந்த முழு மனித சமூகத்திற்கும், நீங்கள் அல்லாஹ்வுக்கு மட்டும் சிரம் தாழ்த்துங்கள் என்று சொல்ல வேண்டும். அல்லாஹ்வுக்காக மட்டுமே உங்களது வணக்க வழிபாட்டுகளிலே ஈடுபட்டுக் கொள்ளுங்கள். உங்களுடைய தொழுகை, உங்களுடைய நோன்பு, உங்களுடைய ஜக்காத், உங்களுடைய ஹஜ், நீங்கள் வைக்கின்ற நேர்ச்சை, நீங்கள் அறுத்துப் பலியிடுகின்ற உழ்கிய்யா, நீங்கள் செய்கின்ற சத்தியம், எல்லாமே அல்லாஹ்வுக்காக மட்டுமே அமைய வேண்டும் என்று நாங்கள் சொல்ல வேண்டும்.

உங்களுக்குக் கக்ஷ்டமா? வறுமையா? நோய் நொம்பளமா? குடும்பப் பிரச்னையா? உளப் பிரச்னையா? சமூப் பிரச்னையா? நீங்கள் அல்லாஹ் ஒருவனிடம் மட்டுமே முறையிடுங்கள். அவன் முஸ்த்தஆன். அவனிடமே உதவி தேடுங்கள். அதனை விட்டு விட்டு சிலைகளிடமோ அல்லது கப்ருகளிடமோ கேட்காதீாகள் என்று தெளிவாகச் சொல்லுங்கள்.

அத்தோடு அழுத்திச் சொல்வோம்! இந்த நாட்டினுடைய சட்டம், உண்மையிலேயே அரைகுறையானது. ஏனெனில், அவை யாவும் மனித சட்டங்கள். அவற்றை மாற்றி அமைப்போம். என்றாவது ஒரு நாள், அதனை ஓங்கி முழங்குவோம்! இந்த நாட்டினுடைய சட்டம் இறைவனுடைய சட்டமாக இருக்க வேண்டும்.

إن الحكم إلا لله

அல்லாஹ் தான் சட்டத்தை இயற்றுகின்றவன். அந்த அல்லாஹ்வினுடைய சட்டங்களே எங்களை ஆள வேண்டும் என்ற அகீதாவைச் சொல்லுங்கள். இதனை யாரும் அழுத்திச் சொன்னதாகத் தெரியவில்லை. இது அகீதாவிலே ஒரு விசயம். தவ்ஹீதிலே ஒரு முக்கியமான அங்கம். இதனை யாரும் மறைக்க முடியாது. மறுக்க முடியாது. இதைப் பற்றிப் பேசாமல் தவ்ஹீதைப் பற்றிப் பேச முடியாது சகோதரர்களே!! எப்படி அல்லாஹ் வணங்கப்படக் கூடியவனாக இருக்கின்றானோ! எப்படி அவன் உதவி செய்யக் கூடியவனாக இருக்கின்றானோ! அதே மாதிரி அல்லாஹ்! எங்களை வழிநடத்தக் கூடியவன். எங்களுக்கு சட்டங்களை வகுத்துத் தரக் கூடியவன். அவனது சட்டம் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமானது. எந்தக் காலத்திற்கும் ஒவ்வாதது அல்ல என்ற அந்தக் கருத்தை ஓங்கி நம்முடைய அழைப்பணியிலே முழங்குவோம். அதனை அழுத்திப் பேசுவோம். ஏன் அதனை நாம் அழுத்திப் பேச வேண்டும் என்றால், அது தவ்ஹீதிலே ஒரு பகுதி.

யுசுப் (அலை) அவர்களது வரலாற்றிலே நாம் இதனைப் பார்க்கின்றோம், சூரா யூசுப் - லே இறைவன் கூறுகின்றான் :

إن الحكم إلا لله

சட்டங்களை இயற்றுகின்ற அதிகாரம் இறைவனுக்கு மட்டுமே உரியது. அந்த சட்டம் வேறு மக்களுடைய கைகளிலே இருப்பதால் இந்த உலகத்திலே என்ன நடக்கின்றது என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஹலால் ஹராமாக்கப்பட்டுள்ளது. ஹராம் ஹலாலாக்கப்பட்டுள்ளது. அதனை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்ளக் கூடிய மக்களாக நாம் இருக்கின்றோமே!!

நிச்சயமாக இந்தக் கருத்துக்களை நாம் அனைத்து மக்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். அவற்றை நடைமுறைப்படுத்துவது இரண்டாவது விசயம். முதலில் கருத்து மாற்றம் அனைத்து மக்களிடமும் உருவாக வேண்டும். சிந்தனை மாற்றம் வர வேண்டும். கருத்துப் புரட்சியை முடக்கி விட வேண்டும். இந்தக் கருத்து எப்படிப் பேசப்பட வேண்டும், எப்படித் தாக்கம் விளைவிக்க வேண்டும் என்றால், தெருவில் நடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது, இன்றைய இளைஞர்கள் கிரிக்கெட்டைப் பற்றிப் பேசிக் கொண்டு போகின்றார்கள் அல்லவா?! ஸலாம் சொன்னால் பதில்

சொல்வதற்குக் கூட அவர்களுக்கு முடியாமல், அந்தக் கிரிக்கெட்டைப் பற்றிப் பேசிக் கொண்டு செல்கின்றார்கள் அல்லவா? அந்தளவுக்கு அந்தக் கிரிக்கெட் அவர்களது மூளையைத் தாக்கி இருக்கின்றது. அந்த மூளையை அந்த அளவு சலவை செய்திருக்கின்றதல்லவா? அந்த அளவுக்கு இந்த அடிப்படையான விசயங்கள் இந்த உலக மக்களிடையே பேசப்பட வைக்க வேண்டும். ஏன்? நம்மால் முடியவில்லை. அது தான் நம்மிடையே நிலவும் சில சூழ்நிலைகளினால் தாக்கமுற்று விடுகின்றோம். நம்முடைய அழைப்புப் பணியை மறந்து விடுகின்றோம்.

சமூகத்திலே மணமாகாத குமரிப் பெண்களுடைய விசயத்தைப் பற்றிப் பேசப்படும் பொழுது, எங்களது அடிப்படையான அழைப்புப் பணியை மறந்து விடுகின்றோம். வட்டியைப் பற்றிப் பேசும் பொழுது, அதற்கு அழுத்தம் கொடுத்து விட்டு, அடிப்படையான அகீதாவை மறந்து விடுகின்றோம். சமூகப் பிரச்னைகள் என்று வரும்பொழுது அதனைத் தீர்க்க ஓடுகின்றோம். அதனடியாகப் பின்பற்ற வேண்டிய அகீதாவை மறந்து விடுகின்றோம். அழைப்புப் பணியை மறந்து விடுகின்றோம். சகோதரர்களே! இது அழைப்புப் பணியில் ஈடுபடுகின்றவர்களுக்கு அழகல்ல! உண்மையிலேயே அழைப்பாளர்கள் எந்தநிலையிலும் தங்களுடைய அடிப்படை விசயங்களிலிருந்து மாறிவிடக் கூடாது.

அவர்கள் சமூக மாற்றத்தைக் கண்ணால் காணலாம். அல்லது காணாமலும் போகலாம். ஷஹீத் செய்யித் குதுப் (ரஹ்) அவர்கள் தன்னுடைய திருமறைக்கு விளக்கவுரையாக எழுதிய திருக்குர்ஆன் நிழலிலே என்னும் தப்ஸீரின் முன்னுரையிலே கூறுகின்றார்கள் - ஒரு அழைப்பாளன் தன்னுடைய ஆயுளால் இந்த அழைப்புப் பணியை வரையறுக்க முடியாது. எனது ஆயுளுக்குள் இஸ்லாமியக் கிலாபத்தைக் கண்டே ஆக வேண்டும் பார்த்தே ஆக வேண்டும் என்ற ஆசை வேண்டாம் என்று சொல்லவில்லை. அந்த ஆசை அனைவருக்கும் இருக்கத் தான் வேண்டும். அதனை நான் என்னுடைய வாழ்நாளிலே கண்டு தான் ஆக வேண்டும். இல்லை என்றால் அவற்றை நான் குறுக்கு வழியிலே கண்டு கொள்வேன் என்று நினைப்பதும், அதன் அடிப்படையில் செயல்படுவதும் கூடாது. எனவே இஸ்லாமியக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த அடித்தளத்தைப் போடுவோம்.

அந்த சுமையா, யாஸிர் தம்பதிகள் அவ்வாறு நினைத்தார்களா? இஸ்லாமிய ஆட்சியைக் கண்டார்களா? யாஸிர் (ரலி) அவர்களுக்கு அந்த இஸ்லாமிய ஆட்சியைக் காண முடிந்ததா? சகோதரர்களே! பத்ரிலும், உஹதிலும், அகல் யுத்தத்திலும், ஷஹீதாகிப் போனார்களே! எத்தனையோ உத்தம ஸஹாபாக்கள்!! அவர்களெல்லாம் இஸ்லாமிய ஆட்சியைக் கண்டார்களா? சகோதரர்களே!! ஆனால், அவர்கள் அனைவரும் இந்த அடிப்படையான அகிதாவிலே நின்று கொண்டு. தங்களது ஆயுளிலே இந்த இஸ்லாமிய ஆட்சிக்கான, அந்த இஸ்லாமிய ஆட்சி உருவாகுவதற்கான தங்களது பங்களிப்பைக் கொடுத்து விட்டுச் சென்றார்கள். அத்தகைய பங்ளிப்பை இந்த அழைப்புப் பணிக்கு வழங்கி விட்டுச் செல்வோம்.

எனவே சகோதரர்களே! அரசியல் ரீதியாக, ஒழுக்க ரீதியாக, பொருளாதார ரீதியாக, சமூக சேவை ரீதியாக, மாற்றம் வேண்டும் என்று யோசிக்கின்றவர்கள், எமது சமூகத்தைப் பீடித்திருக்கின்ற ஒழுக்கச் சீர்கேடுகள், நூதனங்கள், பித்அத்துக்களை ஒழிக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்கள், அதே நேரத்தில் இந்த சமூகத்தைப் பாதுகாப்பதற்கு ஜிஹாத் அவசியம் என்று சொல்லக் கூடியவர்கள் கூட, இந்த அகீதாவின் அடிப்படையில் தான் இவை யாவற்றையும் அவர்கள் யோசிக்க வேண்டும். இந்த அழைப்புப் பணிக்கு வேலி ஜிஹாது தான் என்பதை இந்த நாட்டின் நிலமை பட்டவர்த்தனமாகக் கூறிக் கொண்டிருக்கின்றது. ஆனால் அதில் மட்டும் நின்று கொண்டு அதனை நாங்கள் சாதிக்க முடியாது. பித்அத்துக்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு எந்த கருத்து வேறுபாடும் இல்லை. அதே போன்று பொருளாதார மாற்றம் வேண்டும். அதனையும் நாங்கள் விரும்புகின்றோம். ஒழுக்கம் மேம்பட வேண்டும். அதனையும் நாங்கள் விரும்புகின்றோம். சமூகத்தில் ஏழை மக்களுடைய

நிலமைகள், அவை தரமுயர்த்தப்பட வேண்டும். விரும்புகின்றோம். ஆனால், இதனை இந்த அடிப்படையை மறந்து விட்டு, அகீதாவை மறந்து விட்டு மனம் போன போக்கில் செல்வதையும், அகீதாவைப் புறக்கணித்து விட்டு நாங்களும் இஸ்லாமிய அழைப்புப் பணியில் தான் ஈடுபடுகின்றோம் என்று கூறப்படுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அழைப்புப் பணியில் ஈடுபடுகின்ற நாம் ஒரு இறுதியான முடிவுக்கு வர வேண்டும். ஒரு உறுதியான முடிவுக்கு வர வேண்டும். அந்தத் தீர்மானத்திலே நாங்கள் இறுதி வரைக்கும் தடம் மாறாமல் இருக்க வேண்டும். அது முக்கியம்.

அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களிடத்தில் ஒரு ஸஹாபி வந்து சொன்னார்கள். யா ராசூலுல்லாஹ்!! எனக்கு இஸ்லாத்தைப் பற்றி ஒரு விசயத்தைச் சொல்லித் தாருங்கள். அந்த விசயத்தைப் பற்றி இனி யாரிடமும் நான் கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடாத, அந்த அவசியத்தை ஏற்படுத்தாத அளவில் அந்த விசயத்தைப் பற்றி எனக்குச் சொல்லித் தாருங்கள் என்று கேட்கின்றார்.

قل أمنت بالله ثم الستقم

அல்லாஹ்வை ஈமான் கொண்டேன் என்று சொல். அதிலே உறுதியாக இருந்து கொள் என்று கூறுகின்றார்கள்.

அதாவது அகீதாவிலே உறுதியாக இருந்து கொள். அதனை விட்டும் தடம் புரண்டு விடாதே என்று கூறுகின்றார்கள்.

உனது அழைப்புப் பணியிலே எத்தனை பிரச்னை வந்தாலும், சமூகத் தீமைகள் குறுக்கிட்டாலும், அந்த அஸ்த்திவாரத்தின் மீது நின்று கொண்டு யோசி! சிந்தி! என்று தான் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். இத்தகைய மனிதர்களுக்குத் தான் அந்த மலக்குமார்கள் சுபச் செய்தி இருக்கின்றது.

நிச்சயமாக அல்லாஹ் தான் எங்கள் ரப்பென்று கூறி, அதிலே உறுதியாக இருந்தார்கள் அல்லவா! அவர்கள் மரணிக்கின்ற வேளையில் மலக்குகள் இறங்கி, நீங்கள் பயப்பட வேண்டாம். நீங்கள் துக்கப்படவும் வேண்டாம். சுவனத்தைக் கொண்டு நன்மாராயம் பெற்றுக் கொள்ளுங்கள். உலகத்திலும், மறுமையிலும் நாங்கள் உங்களுக்கு நேசர்களாக இருக்கின்றோம். உங்களுக்குத் தேவையானவைகள் எல்லாம் அந்த சொர்க்கத்திலிருந்து, அந்த அல்லாஹ்வின் விருந்தாக உங்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும். உங்களுக்கு வேண்டியதெல்லாம் கிடைக்கும் என்று அந்த மலக்குகள் இத்தகையவர்களுக்கு சுபச் செய்தியைத் தெரிவிக்கின்றார்கள்.

அந்த சுபச் செய்தி நமக்கு வேண்டுமா!? அந்த வாழ்த்துக்குரிய மக்களாக நாம் மாற வேண்டுமா? என்று நீங்கள் விரும்புவீர்கள் என்றால், இந்த அகீதாவின் பக்கம் உறுதியாக இருந்து, அந்த அகீதாவின் பக்கம் மனிதர்களை அழைத்து, அந்த அழைப்பின் ஊடாகத் தீனை நிலை நாட்டி, தீனை மேலோங்கச் செய்து இஸ்லாமிய சமூக அமைப்புக்கோ அல்லது கிலாபத்திற்கோ நாம் அனைவரும் வழி காணுவோம். அல்லாஹ்ஹு த்தஆலா நம் அனைவருக்கும் நல்அருள்பாளிப்பானாக! ஆமீன்!!